ISSN 1391-9504

விஜய்

Vijey විජය

12.05.2010 - மலர் 07, இதழ் 10

இலக்கியத்திற்கு துணை புரியும் நிறுவனங்கள்

முதலாம் உலக யுத்தம்....

உலகை அச்சுறுத்தும் புவி வெப்பமடைதல்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லாந்தர் 89

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

விஜயபால இளவரசனுக்கும் இதுதான் நடக்கப் போகிறது.

நாட்டு மக்கள் கலவரமடைவார்கள் என்ற அச்சத்தினால்தான் அவனைக் கொல்லாமல் சிறைப்பிடித்து வைத்திருந்தனர்.

வரலாற்றிலிருந்து..

தொடரும்

மன்னன் இரண்டாம் விமலதர்மசூரியன்

இரண்டாம் இராஜசிங்க மன்னன் பௌத்த மதத்தைச் சேர்ந்தவனாகிலும் கிறிஸ்தவ மதத்திற்கும் பெரும் மதிப்பளித்து வந்தான். அதேபோல், கிறிஸ்தவர்களை இம்சைப்படுத்தவோ, நெருக்கடிகளை ஏற்படுத்தவோ இல்லை.

தனது சுய கௌரவத்தைப் பாதுகாத்ததோடு, ஏனைய மதங்களுக்கும் உரிய மதிப்பளித்தான். மன்னன் இரண்டாம் இராஜசிங்கனுக்குப் பின் அவனது மகனுக்கே அரசுரிமை கிடைத்தது. அவர் இரண்டாம் விமலதர்மசூரியன் எனும் பெயரில் அரசுரிமை பெற்றார். இம்மன்னன் சிறு வயது முதல் விகாரைகளின் சூழலில் மத நம்பிக்கையுடன் வளர்ந்தவர். அவர் மிகுந்த பக்தியுள்ளம் கொண்டவர். சாந்தமான குணத்துடன் அரசியலில் ஈடுபடாமல் காலம் கழித்தவர். இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கெதிராக கி.பி 1684 இல் நாட்டில் ஏற்பட்ட கலவரத்தின்போது இம்மன்னன் குழந்தைப் பருவத்தில் இருந்தார்.

அன்றுமுதல் நாட்டு மக்களோடு நெருக்கமற்றவராக இருந்தார். அதனால், அரசாட்சி பற்றி அறியாதிருந்தார். நல்லதோர் உன்னத வாழ்க்கையைக் கடைப்பிடித்து வந்தார்.

இரண்டாம் விமலதர்மசூரியன் நாட்டின் ஆட்சியை உயர் குடிகளதும் பௌத்த மத குருக்களினதும் அறிவுரைகளின்படியே மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களே, ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் வழங்கி வந்தனர். அது நாட்டு மக்களுக்கோ பெரும் நன்மையாக அமைந்தது. சமாதானமாகவும் மகிழ்ச்சியோடும் வாழ வழிவகுத்தது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும் செல்வச்செழிப்போடும் வாழத் தலைப்பட்டனர். இராஜசிங்க மன்னனின் இறுதிக்காலத்தில் அழிந்து போன கௌரவம் மீண்டும் மக்களுக்குக் கிடைக்க வழிவகுத்தது.

மன்னன் இரண்டாம் விமலதர்ம சூரியன் சிங்காசனம் ஏறுவதை அறிவிக்கும் விழாவொன்று கோட்டேயில் நடைபெற்றது. ஆள்பதியுடன் செய்தி ஓலை ஒன்றை ஏந்திய வண்ணம் சில உயர் குடியினர் கோட்டைக்கு வந்தனர். ஒல்லாந்தரின் கீழ் உள்ள பிரதேசங்களில் மலையக மன்னனின் ஆட்சி நிலவுவதாக அச்செய்தி ஓலையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமான காற்றை சுவாசிக்க உதவும் 'ஃபயர்ஸ்கூபா'

வளியில் பல்வேறு மாசுக்கள் அதிகளவில் கலந்திருப்பதனால், தற்காலத்தில் சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கான வாய்ப்புகள் அரிதாகிக்கொண்டே வருகின்றன.

இந்த நிலையிலிருந்து தற்காத்துக்கொள்ள புதியதொரு சாதனம் அறிமுகமாகியுள்ளது. அது சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கு நமக்கு உதவும் எனக் கூறப்படுகின்றது. ஃபயர்ஸ்கூபா (Firescuba) எனப்படுகின்ற இந்தக் கருவியானது வளியிலுள்ள கார்பனை வடிகட்டி சுத்தமாக மாற்றித் தரும்.

வாய்-மூக்கு ஆகிய பகுதிகளை மறைக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கருவியை வெளியில் செல்லும்போதோ அல்லது நாம் தங்கியிருக்கும் இடங்களில் வளி மாசடையும் ஆபத்துக்கள் நேரும்போதோ அணிந்துகொள்ளலாம். அப்போது வாய்-மூக்கு வழியாக உட்புகும் வளியை வடிகட்டி, சுத்தமான காற்றை சுவாசிக்க இது வழிவகுக்கும்.

பப்பாளி இலை மருத்துவம்

தொண்டை, கல்லீரல், நுரையீரல், இரைப்பை, மூளை, கருப்பை என மனிதனின் பல்வேறு உறுப்புகளை தாக்கக் கூடிய புற்றுநோய் வகைகள் உள்ளன.

இவை அனைத்துக்கும் பப்பாளி இலை சிறந்த மருத்துவமாக அமையும் என்பதோடு, பப்பாளி இலையில் அடங்கியிருக்கின்ற 'டி.எச்.1 டைப் சைடோகின்ஸ்' எனும் மூலக் கூறுகள் நோய் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவித்து புற்றுநோயின் தீவிரத்தைக் கட்டுக்குள் வைக்கின்றது என்பதே ஆய்வுக்குழுவினரின் கருத்தாக இருக்கின்றது.

பப்பாளி இலையில் புற்றுநோய்க்கான எதிர்ப்பு மருந்து அடங்கியிருப்பதாக ஃப்ளோரிடா பல்கலைக்கழக ஆய்வுக்குழுவினர் அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

அனைவருக்கும் சவாலான ஒரு நோயாகவே புற்றுநோய் இருக்கின்றது. இதில் வாய்,

பனிக்கட்டி எரிபொருள்

பனிக்கட்டியை எரித்து எரிபொருளாகப் பயன்படுத்தலாம் என ஆய்வொன்றினூடாக தெரிய வந்துள்ளது.

உறைந்திருக்கும் பனிக்கட்டியில் 'மிதேன் ஹைட்ரேட்' எனும் வாயு அடங்கியிருக்கின்றது. இது எரியும் தன்மை கொண்டது. எனவே, அதிக அழுத்தத்தில் பனிக்கட்டிகளை உருகச் செய்யும்போது பனிக்கட்டி எரியத் தொடங்குகின்றது. இந்த வகையில்

பனிக்கட்டியை ஒரு மாற்று எரிபொருளாகப் பயன்படுத்த முடியும் என மேற்படி ஆய்வில் ஈடுபட்ட சீனா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் கொரிய விஞ்ஞானிகள் குழு அறிவித்துள்ளது.

சா/தரப் பரீட்சை:

17,000 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்

2009 க.பொ.த சா/தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த பரீட்சார்த்திகளில் 17,000 பேர் ஒன்பது பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கு நாடளாவிய ரீதியிலிருந்து 2,77,260 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிலியில் வகுப்பறைகளாக 7 பழைய பஸ்கள்

சிலி நாட்டின் தலைநகரான சன்டியாகோவில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் வகுப்பறைகளாக தற்போதளவில் 7 பழைய பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் சிலியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது அங்கு எழுந்த 'சுனாமி' பேரலைகளினால் நதியொன்றுக்கருகில் அமைந்திருந்த பாலர் பாடசாலையொன்று முற்றாக சேதமடைந்தது.இந்தப் பாலர் பாடசாலையை நடத்திச் செல்வதற்கே மேற்படி பழைய பஸ்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

5 பழைய பஸ்கள் மாணவர்களுக்கான வகுப்பறைகளாகவும் ஒரு பஸ் ஆசிரியர்களுக்கான ஓய்வறையாகவும் மற்றுமொரு பஸ் மாணவர்களுக்கான மலசலகூடமாகவும் பயன்படுத்தப்படுகின்றதாக குறித்த பாலர் பாடசாலை அதிபர் க்றிஸ்டினா வெலென்ஸுவெலா தெரிவிக்கின்றார்.

ஒரு வகுப்பறையில் 20 மாணவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக ஒவ்வொரு பஸ்ஸும் தயார்படுத்தப்பட்டுள்ளது. பஸ்ஸின் முன்பகுதியில் கரும்பலகை பொருத்தப்பட்டுள்ளது. பயணிகளுக்கான ஆசனங்கள் உள்ள இடங்களில் சிறிய மேசைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க முன்வந்தவர்கள் அவற்றை விரைவில் பூரணப்படுத்திக்கொடுத்த தாகவும் அவர் நன்றியுடன் தெரிவித்துள்ளார்.

விஜய்
Vijey Bata
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

'அப்பே லோக்கய' இரண்டாம் இதழ்

அப்பே லோக்கய (நமது உலகம்) என்ற அரையாண்டு சிறுவர் சஞ்சிகையின் இரண்டாம் இதழ் வெளியாகியுள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இதில் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மாணவர்களின் படைப்புக்களுக்கு களம் கொடுக்கும் நோக்கில் வெளிவருகின்ற இந்த சஞ்சிகை இலவசமாக வழங்கப்படுகின்றது.

கல்வி சம்பந்தமான விடயங்கள், பொது அறிவு, சித்திரம் என பலதரப்பட்ட அம்சங்களும் இந்த சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன. 40 பக்கங்களுடன் வெளிவந்துள்ள இந்த சஞ்சிகையின் பக்க வடிவமைப்புக்கள் நேர்த்தியாக அமைந்திருப்பதும் வரவேற்கத்தக்கது.

இளம் வயதினரைக்கொண்ட குழாம் ஒன்றின் முயற்சியில் இத்தகைய

சஞ்சிகையொன்று வெளியிடப்படுகின்றமை பாராட்டுக்குரியதே. இச்சஞ்சிகையை இலவசமாகப் பெற விரும்புகின்றவர்கள் 071-9439740 என்ற தொ.பேசி இலக்கத்தில் சமிந்த என்பவருடன் தொடர்புகொண்டு பெறமுடியும்.

க.பொ.த (உ/தர)

தொடர்பாடல், ஊடகத்துறை பரீட்சை ஒகஸ்டில்

கல்வி அமைச்சு கடந்த வருடத்தில் க.பொ.த (உ/த) பிரிவு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திய 'தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை' பாடத்திற்கான பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த சுற்றறிக்கை பரீட்சைத் திணைக்களத்தினால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பாடத்திற்கான பரீட்சை முதல் தடவையாக நடத்தப்படவுள்ளமையால் குறித்த பரீட்சையின்போது வழங்கப்படவுள்ள வினாத்தாளின் வடிவத்தை ஒத்த மாதிரி வினாத்தாள்களும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மாதிரி வினாத்தாள்களும் அதற்கான விடைகளும் www.doenets.lk என்ற பரீட்சைத் திணைக்கள இணையத்தில் பெறக்கூடிய வசதிகளும் செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

'விஜய்' உடன் கைகோருங்கள்!

உங்களுக்கோர் அரிய வாய்ப்பு

அன்பின் வாசகர்களே!

'விஜய்' வாசகர்களாகிய உங்களிடமிருந்து 'விஜய்' இதழ்கள் குறித்த குறை-நிறைகள், ஆலோசனைகளை விமர்சனங்களாக எதிர்பார்க்கின்றோம். அவற்றை 'விஜய்' இதழில் பிரசுரிக்கவும் எண்ணியுள்ளோம்.எனவே இந்த இதழில் (12.05.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் விமர்சனங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் பிரசுரமாகியிருக்கின்ற ஒவ்வொரு கட்டுரை பற்றியதாகவோ அல்லது ஒட்டுமொத்த விஜய் பத்திரிகை தொடர்பானதாகவோ இருக்கலாம்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 19.05.2010.

அனுப்ப வேண்டிய முகவரி:

'விஜய்' வாசகர்,
த.பெ.எண் 2037,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகால அமெரிக்கா

வட மற்றும் தென் அமெரிக்காவின் பிரதான நாகரிகங்கள் குறித்து பல புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நாகரிகங்களுக்கு உரித்தான மக்கள் மலைப் பிரதேசங்களில் சொகுசான பாரிய மாளிகைகளையும் 'பிரமிட்' வடிவ வீடுகளையும் நிர்மாணித்ததாக தெரியவருகின்றது.

தென் அமெரிக்காவின் பொலீவியாவில் டைஹோன்கோவில் பிரமாண்டமான கல்லில் செதுக்கப்பட்ட உருவங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அண்டஸ் பிரதேசத்தில் உலகில் முதன்முதலாகத் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட நகரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் இத்தகைய கல் உருவங்கள் பல இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அக்காலத்தில் சக்கரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் அவர்களிடத்தில் இருக்கவில்லை. எனினும், அவர்கள் இத்தகைய பிரமாண்டமான கட்டடங்களைக் கட்டியுள்ளமை வியப்பான விடயமாக இருப்பதோடு, அந்நாகரிகங்கள் குறித்த பல உண்மைகளை வெளிப்படுத்த அங்கு கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் எச்சங்கள் பெரிதும் உதவுவதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

'அனசாசி' மனித இனத்தினர் இன்றைய ஐக்கிய அமெரிக்காவின் தென்மேல் பகுதியில் அன்று வாழ்ந்தனர். தானியங்களைப் பயிர் செய்த அவர்கள் அப்பிரதேசத்தில் 5000 பேரிலும் கூடுதலானோர் வசிக்கக்கூடிய வகையில் அதிவிசாலமான கட்டடங்களை நிர்மாணித்தனர். இத்தகைய மாளிகைகளை 'பப்லோ' எனும் பெயரில் அழைத்தனர். இம்மாளிகைகள் நூற்றுக் கணக்கான அறைகளைக் கொண்டிருந்தன.

'ஹோமோகொம்' மக்களும் தென் மேல் அமெரிக்காவிலேயே வாழ்ந்தனர். சிறந்த நீர்ப்பாசன கட்டமைப்புகளை நிர்மாணித்து நிலத்தை வளப்படுத்திய அவர்கள் 'அனசாசிகள்' என அழைக்கப்பட்டனர். பருத்தி ஆடைகளை அவர்கள் அணிந்தனர். அழகிய கலை வேலைப்பாடுகள் அடங்கிய மண் விளக்குகளைப் பயன்படுத்தினர்.

அந்தவகையில், தூர கிழக்குத் திசையில் வாழ்ந்த மிசிசிப்பியினர் தனி இல்லங்களைக்கொண்ட அலகுகளை உருவாக்கி முறையான இல்லங்களை அமைத்துக்கொண்டனர். கி.பி 700 ஆம் ஆண்டளவில் அமெரிக்காவில் இருந்த மிகவும் விசாலமான நகரமாக மத்திய மெக்ஸிகோவில் அமைந்த தியோதி ஹோகன் நகரம் திகழ்ந்தது. அதன் அக்கால சனத்தொகை 100,000 ஆகும். இந்நகரமானது 600 க்கும் மேற்பட்ட பிரமிட்டுகளையும் 2000 இற்கும் மேற்பட்ட வதிவிடக் கட்டடங்களையும் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளையும் கொண்ட நகரமாக காணப்பட்டது.

கி.மு 500 ஆம் ஆண்டுகளில் இருந்து மக்கள் தியோதிஹோகனில் தானியங்களைப் பயிர்செய்து, கற்கள் மற்றும் களிமண்ணைப் பயன்படுத்தி பிரமிட் வடிவ வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர். இந்நகரம் மிகவும் சிறந்த நிலையை கி.பி 350 முதல் 750 க்கும் இடைப்பட்ட காலத்தில் அடைந்தது. பின்னர் இந்நகரம் 'டொல்டெக்ஸ்' கூட்டத்தினரின் தாக்குதல்களால் அழிவடைந்தது. எனினும், டொல்டெக்ஸினர் இந்நகரைப் பின்னர் அபிவிருத்தி செய்தனர்.

டியானுநாக்கோ

டியானுநாக்கோ என்பது தென் அமெரிக்காவின் 'அந்தீஸ்' மலை உச்சியில் 11600 அடி அதாவது 3500 மீற்றர் உயரத்தில் அமைந்ததோர் நகரமாகும். அந்நகரமானது 500-1000 க்கும் மலை மீதுள்ள 'டிட்டிகாக்கா' ஏரியை அவர்கள் பயன்படுத்தினர். பேருவில் அமைந்த அந்தீஸ் ராச்சியமானது 'டியானுநாக்கோ' ராச்சியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. பேருவின் 'மொச்சிகா' போன்ற தென் அமெரிக்கர்களில் பெரும்பாலானோர் தமது வீடுகளையும் வணக்கஸ்தலங்களையும் செங்கற்களாலேயே அமைத்துக் கொண்டனர்.

நாளடைவில் அந்த மக்கள் படிப்படியாக அமெரிக்காவின் தென் பகுதியை நோக்கி இடம்பெயரலாயினர். இதனால், பல்வேறு வகையான கலாசாரங்கள் தோன்றியதோடு, அக்கலாசாரங்கள் வளர்ச்சியும் அடைந்தன. விவசாயத்திற்குப் பெயர்பெற்ற பிரதேசங்களில் குடியேற்றங்கள் பெருகி உயர் நாகரிகங்கள் தோன்றின.

இடைப்பட்ட காலகட்டத்தில் மிக அபிவிருத்தி அடைந்த நகரமாகத் திகழ்ந்தது. இங்கு மனிதர்கள் பொருட்களைக் கொண்டு செல்ல 'லாமாஸ்' எனப்படும் ஒருவகை மாடுகளைப் பயன்படுத்தினர். 'அந்தீஸ்'

தென் அமெரிக்காவின் பொலீவியாவில் டைஹோன் கோவிலில் பிரமாண்டமான கல்லில் செதுக்கப்பட்ட உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கே 'அண்டஸ்' பிரதேசத்தில் உலகில் முதன்முதலாகத் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட நகரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் இத்தகைய கல் உருவங்கள் பல இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுவரோவியம் - மெக்ஸிகோவின் புனித நகரமான 'யோதிஹோகன்' இல் மிக உயரிய கலைப்படைப்பாக 'டிலோகான்' சுவரோவியம் திகழ்கின்றது. மழைக்கும் பிரபஞ்சத்திற்கும் அதிபதியாகத் திகழும்'டிலெலா' எனும் கடவுளின் உருவமே இச்சுவரோவியத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய அமெரிக்காவின் 'ஒஹியோ' வாசிகளான அடீனா இன மக்களால் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக களிமண்ணால் உருவாக்கப்பட்ட நாகபாம்பு ஒன்றின் தோற்றம் இதுவாகும். 1300 அடி நீளமான இப்படைப்பானது நிலமட்டத்தில் இருந்து 3 அடி உயரம் வரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

(அ)

அமெரிக்க நாகரிகம்

- ★ கி.பி 600 - தியோதிஹோகன் மெக்ஸிகோவில் பலம் வாய்ந்த ராச்சியமாக உருவெடுத்தது. 'ஹு¯ஆரி' பலம் வாய்ந்த ராச்சியமாகத் திகழ்ந்தாலும் 'தியோதிஹோகன்' அளவிற்குப் பலம்பெற்றிருக்கவில்லை.
- ★ கி.பி 700 - அமெரிக்காவின் தென்மேல் பிரதேசத்தில் பழைமை வாய்ந்த 'அனசாரி' நாகரிகம் வளர்ச்சி அடைந்தது. 'அனசாரிகள்' மாடிகளைக் கொண்ட மாளிகைகளை அமைத்தனர்.
- ★ கி.பி 750 - 'தியோத்திஹோகன்' நகரம் அழிந்தது.
- ★ கி.பி 800 - 'ஹு¯ ஆரி கள்' மேற்கொண்ட ஆக்கிரமிப்போடு பேருவில் நெசகாஸ்கள் தமது நாட்டின் அதிகாரத்தை இழந்தனர்.
- ★ கி.பி 900 - மெக்ஸிகோவில் 'டொல்டெக்ஸ்கள்' எழுச்சி பெற்றனர்.
- ★ கி.பி 968 - 'டொல்டெக்ஸ்கள்' 'டுலா' வில் தமது தலைநகரைக் கட்டி எழுப்பினர்.
- ★ கி.பி 1000 - மிசிசிப்பிகளின் கலாசாரத்தின் பொற்காலமாகும். தலைநகராக 'செவோகியா'வை தெரிவு செய்தனர்.
- ★ கி.பி 1100 - பேருவில் 'ச்சிமு' ராச்சியத்தின் தோற்றம்.
- ★ கி.பி 1100 - நடுப்பகுதியில் வோல்டெக்ஸ்களின் வீழ்ச்சியோடு 'டுலா' தலைநகரம் அழிவுற்றது.
- ★ கி.பி 1120 - மலையின் மீது 'கொலராடோ' மாளிகை அமைக்கப்பட்டது.

அந்தீஸ்ஸில் பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தும் 'லாமாஸ்' எனும் மாடு இங்கு காணப்படுகின்றது. இதன் தோல் மற்றும் இறைச்சி மனிதரால் பயன்படுத்தப்பட்டது.

யானைகள் ஏன் மலையேற விரும்புவதில்லை?

மனிதனோடு மிக நெருக்கமுள்ள மிருகங்களில் யானையும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. யானையைப் பற்றி பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது பல்வேறு புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. அதன்படி, யானைகள் உயரமான மலைச்சரிவுகளில் பயணிப்பதற்கோ, உயரமான மலைப்பிரதேசத்தில் ஏறிச் செல்லவோ விரும்பாமல் தமது வெறுப்பை வெளிப் படுத்துகின்றன. மலை ஏறும்பொழுது அதிகளவு கலோரி விரயமாவதே அதன் வெறுப்பிற்குக் காரணமாகும். இவ்வாறு இழக்கப்படும் கலோரிக்கு நிகராக அது அதிகளவு உணவை உட்கொள்ள வேண்டியுள்ளது.

பொதுவாக 4 தொன் நிறையுள்ள யானை ஒன்றிற்கு மலை ஏறும்போது மேலதிகமாக 25 கலோரி (100kj) விரயமாகும். அதன்படி சமமான ஒரு சாதாரண பாதையில் செல்வதைவிட மலைச்சரிவுகளில் ஒரு மீற்றர் பயணிக்கும்பொழுது 25 மடங்கு அதிக மான சக்தியை ஒரு யானை இழக்க வேண்டிவரும். எனவே, 100 மீற்றர் உயரமான மலையில் ஏறும்போது 10,000kj கலோரி செலவாவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு செலவாகும் கலோரியின் அளவிற்குப் பதிலாக தேவையான அளவு உணவைப் பெற்று உடலை மீண்டும் சரியான நிலைக்கு கொண்டுவர யானைகளுக்கு 1/2 மணித்தியாலத்தை மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளது.

இதுகுறித்து, ஆபிரிக்காவின் GPS தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் வட கென்யாவில் யானைகளின் தொகை மிக வேகமாக குறைவடைந்து வருவதாகத் தெரிய வருகின்றது.

அப்பிரதேசங்களில் அதிக மலைச்சரிவுகள் காணப்படுவதாகவும் அப்பிரதேசங்களில் பயணிக்கும்பொழுது யானைகள் களைப்படைந்து தமது சீர சக்தியை இழந்துவிடுவதே அதற்கான காரணம் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலைப்பாங்கான பாதையில் பயணிக்கும்பொழுது யானைகள் பெரும் சிரமப்படுவதாகவும் யானைகளின் அதிக பாரமான உடல் அதற்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அத்தோடு, ஏனைய வகையான மிருகங்களோடு ஒப்பிடும்போது தாவர உண்ணியான யானைகளில் இந்த வேறுபாடுகளைத் தெட்டத்தெளிவாகக் காணலாம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

(அ)

விஜய் மாணவர் கழகம்

அங்.இல: 3565

ரா.மகீபன்,
தரம் - 2[E],
யாழ்.இந்து ஆ.பாட.,
யாழ்ப்பாணம்.

அங்.இல: 3566

சகீல் அஹமட்,
தரம் - 1[A],
கிண்ணியா ம.கல்.,
கிண்ணியா.

அங்.இல: 3567

பா.டுசேந்தினி,
தரம் - 2,
அல்லாரை அ.த.வித்.,
கொடிகாமம்.

அங்.இல: 3568

ப.வேனுதாஸ்,
தரம் - 1,
ஸ்ரீ நாகராஜா வித்.,
வவுனியா.

அங்.இல: 3569

து.கார்த்திக்,
தரம் - 8,
மடுக்கரை அ.த.க.பாட.,
மன்னார்.

அங்.இல: 3570

பா.துவாரகா,
தரம் - 6[I],
விஹாரமகாதேவி ம.க.,
கண்டி.

அங்.இல: 3571

சி.நயந்தகுமரன்,
தரம் - 9,
கனகரத்தினம் ம.ம.வித்.,
யாழ்ப்பாணம்.

அங்.இல: 3572

ப.குகதீபன்,
தரம் - 5,
விக்டோரியாக் கல்.,
யாழ்ப்பாணம்.

அங்.இல: 3573

நஸ்லா யூசுப்,
தரம் - 8[X],
ஸாஹிரா தே.பாட.,
மாவனல்லை.

அங்.இல: 3574

எம்.நத்ஹர்,
தரம் - 9[B],
அல்-ஹிலால் வித்.,
கல்முனை.

அங்.இல: 3575

எம்.இஃப்ஹாம்,
தரம் - 1,
என்.யூ.ஐ.ஏ.கல்.,
மூதூர்.

அங்.இல: 3576

எம்.ஜனூஸ்,
சிறாஜிய்யா அ.கல்.,
ஒட்டமாவடி-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்திற்கு துணை புரியு

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையினால் 1990 ஆம் ஆண்டு இலங்கை தேசிய நூலகம் ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய நூலகம் மற்றும் நூலக வளங்கள் மத்திய நிலையம் மற்றும் வலையமைப்பின் ஊடாக நூலகம் மற்றும் தகவல்களை மக்களுக்கு வழங்குதலும் அதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான கலாசார வெற்றிகளைப் பெறுவதற்கான உதவிகளைப் பெறுவதும் இதன் அடிப்படை நோக்கமாகும்.



வாசிப்பு மனிதனை முழுமையாக்கும் என்பது பிரபலமான ஒரு கூற்றாகும். இது உண்மை எனின், இலக்கியத்திற்குப் பிரதான இடம் கிடைக்கவேண்டும். மனிதனுக்கும் இலக்கியத்திற்கும் இடையில் ஆச்சரியமான பிணைப்புள்ளது. இந்தப் பிணைப்பைப் பலப்படுத்தும் அதாவது, இந்தப் பிணைப்புக்கு உதவும் நிறுவனங்களும் உள்ளன. அந்தவகையில், இலக்கியம் தொடர்பான விடயங்களுக்கு உதவும் நம் நாட்டில் உள்ள நிறுவனங்கள் பற்றிப் பார்ப்போம்.

கலாசார அமைச்சு

வரலாறு:

1948 இல் இலங்கை சுதந்திர நாடான பின்னர் அன்றிருந்த தலைவர்கள் இலங்கை பொருளாதார ரீதியில் மட்டுமன்றி, கலாசார ரீதியிலும் முன்னேற்றமடையவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். இதன்படி, 1952 இல் நாடாளுமன்றச் சட்டத்தின்கீழ் கலைப்பேரவை (Art Council) ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதன்பின் 1956 இல் பதவிக்கு வந்த அரசாங்கம் இந்தக் கலைப்பேரவையை கலாசார அமைச்சாக மாற்றியது. இந்த நிகழ்வு 1956 ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெற்றது.

இலக்கியத்திற்காக ஆற்றப்படும் பணிகள்:

* 1957 முதல் இலக்கியத்தைத் தொனிப்பொருளாகக் கொண்ட அரச விழாக்கள் பல நடைபெற்றன. அன்று தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் கலாசாரத் திணைக்களத்தினால் இந்த விழா நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்றது. பிரதேச, பிரிவு, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் பகிரங்க மற்றும் வரையறுக்கப்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன. தேசிய ரீதியில் தெரிவாகும் போட்டியாளர்களுக்கு இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்த சிறுவர், சிறுமியர்களின் திறமைகள் அறியப்பட்டு அவர்களுக்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

* இதனைத்தவிர, கையெழுத்துப் பிரதிப் போட்டியொன்றும் நடைபெறுகிறது. அதில் தெரிவாகும் பிரதிகள் அச்சுருவாக்கம் செய்யப்படும். அப்போட்டியாளர்களுக்கு சிறப்பு சன்மானங்களும் பரிசுகளும் நூல் பொதிகளும் வழங்கப்படுகின்றன.

* கலாசார அமைச்சினால் மேற்கொள்ளப்படும், விசேடமான இலக்கியப் பணியாக அரச சாகித்திய விழா மற்றும் சாகித்திய விழா என்பனவற்றைக் குறிப்பிடமுடியும். முன்னைய ஆண்டில் எழுதப்பட்ட படைப்புகளை மூன்று மொழிகளிலும் தெரிவு செய்து, அவை நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு, ஆய்வுகள் ஆகிய பல தலைப்புகளின் கீழ் பிரித்துத் தெரிவு செய்யப்படுகின்றன. இந்த படைப்புகளுக்கென விருதுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

* பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்திலும் சாகித்திய விழாக்கள் நடைபெறுகின்றன. அப்பகுதிகளில் இலக்கியத்திற்கு பங்காற்றிய கலைஞர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். சான்றிதழ்கள், விருதுகள் வழங்கப்பட்டு அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இவை வயது வேறுபாடின்றி மேற்கொள்ளப்படுகின்றது.

* இலக்கியம் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள் வெளியீடு, நூல் கண்காட்சி மற்றும் அச்சுருவாக்கப்பட்ட நூல்கள் கொள்வனவு என்பனவும் கலாசார அமைச்சின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

* மேலதிக விபரங்களுக்கு : 011-2882030. www.cultural.gov.lk

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம்

கலாநிதி கே.ஜயதிலக தலைமையில் இந்த புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம் 1985 இல் ஆரம்பிக்கப்பட்டது. நாடு முழுவதும் உள்ள புத்தக வெளியீட்டாளர்களுடன் இணைந்து பொது நியமத்தின்கீழ் விலை, வெளியீடு என்பன தொடர்பான இணக்கப்பாட்டுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ம் நிறுவனங்கள்

செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்படும் மாபெரும் புத்தகக் கண்காட்சி குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும்.

1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்காட்சி தொடர்ந்து 11 ஆண்டுகளாக முன்னெடுக்கப்படுகின்றது. தெற்காசியாவில் நடைபெறும் மிகப் பெரிய புத்தகக் கண்காட்சியும் இதுவாகும். மேலதிக விபரங்களுக்கு தொ.பேசி: 2696821.

இலங்கை தேசிய நூல்கள் அபிவிருத்தி சபை

ஆரம்பம்:

1972 ஆம் ஆண்டு இந்த சபைக்கு அடித்தளமிடப்பட்டது. பின்னர் 1974 இல் கல்வி அமைச்சின் செயலாளரின் கீழ் உள்ள யாப்பு ரீதியில் ஸ்தாபிக்கப்படாத அமைப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை தேசிய நூல்கள் அபிவிருத்தி சபை:

இளையோரான மாணவ, மாணவியர் மத்தியில் தரம் வாய்ந்த வாசிப்புத் திறனை விஸ்தரித்தல் இந்த நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும். இதனைத் தவிர, தரமான நூல்களை வெளியிடல், சிறுவர் நூல்களை எழுதுதல் மற்றும் வெளியீடு என்பன இங்கு மேற்கொள்ளப்படுவது விசேடமான பணிகளாகும்.

நூல்கள் அபிவிருத்தி சபையினால் இலக்கியத்திற்கு ஆற்றப்படும் பணிகள் சில பின்வருமாறு :

- சிறுவர், சிறுமியர்களுக்காக நூல்களை எழுதும் எழுத்தாளர்களுக்கு அறக்கட்டளை ஒன்று அமுல்படுத்தப்படுகின்றது.
- இங்கு சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழிகளைச் சேர்ந்த 25 எழுத்தாளர்களிடமிருந்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.
- நூல்கள் அபிவிருத்தி சபையின் தொடர்புகள் அற்ற சுயாதீனமாக நூல்களை வெளியிடும் எழுத்தாளர்களிடமிருந்து ஆண்டுக்கு இரண்டு ரக நூல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இந்த நூல்கள் பாடசாலைகள் மற்றும் சமயப் பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்யப்படுகின்றது.
- எழுத்தாளர்களுக்கு பலதரப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் நூல் வெளியீடு பற்றிக் கலந்துரையாடப்படுகின்றன.
- எதிர்கால சந்ததியினரின் வாசிப்புத்திறனை மேம்படுத்த விசேட விருதுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. பாடசாலை நூலகங்களில் நூல்களைப் பயன்படுத்தும் திறமை பெற்ற மாணவ, மாணவியரை வலயங்களில் இருந்து தெரிவுசெய்து விருது வழங்கப்படுகின்றது. சிறுவர், சிறுமியரின் வாசிப்புத் திறனை ஊக்குவிப்பது இதன் நோக்கமாகும்.
- பாடசாலைகளில் அடிக்கடி புத்தகக் கண்காட்சிகளை நடத்துவதன் ஊடாக மாணவர்களுக்கு குறைந்த விலையில் புத்தகங்களைக் கொள்வனவு செய்ய வாய்ப்புக் கிட்டும். மேலதிக விபரங்களுக்கு 2784839.

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபை

இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையினால் 1990 ஆம் ஆண்டு இலங்கை தேசிய நூலகம் ஸ்தாபிக்கப்பட்டது. தேசிய நூலகம் மற்றும் நூலக வளங்கள் மத்திய நிலையம் மற்றும் வலையமைப்பின் ஊடாக நூலகம் மற்றும் தகவல்களை மக்களுக்கு வழங்குதலும் அதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான கலாசார வெற்றிகளைப் பெறுவதற்கான உதவிகளைப் பெறுவதும் இதன் அடிப்படை நோக்கமாகும்.

ஆய்வு நூலகம் என்பதனால் அது அனைவருக்கும் ஏற்றது. இது இலங்கையின் பிரதான நூலகங்கள் பலவற்றின் கூட்டாகும்.

- சஞ்சிகைகள் - 500 க்கும் அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு சஞ்சிகைகள்.
- இலங்கைப் பத்திரிகைகள் - 300 க்கு அதிகமான சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளின் தொகுப்பு (1976 இன் பின் பிரசுரமான பத்திரிகைகள்).
- அரச வெளியீடுகள் - வர்த்தமானிகள், நாடாளுமன்ற அறிக்கைகள் (ஹன்சாட்), சட்ட திட்டங்கள், அமர்வு அறிக்கைகள், நிர்வாக அறிக்கைகள், சட்ட அறிக்கைகள், நாடாளுமன்ற சட்ட மூலங்கள்,மசோதாக்கள்.
- வரைபடங்கள் - அளவீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைக்குரிய வரைபடங்கள் ஆயிரத்திற்கும் அதிகமானவை.
- ஒலைச் சுவடிகள் தொகுப்பு.
- நாடகப் பிரதிகள் தொகுப்பு.
- ஒளிஒலி தொகுப்புகள் - இலங்கையின் பாடல்கள், விவரண நிகழ்ச்சிகள், நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள்.
- நூலக மற்றும் விஞ்ஞான தொகுப்புகள் - வெளிநாட்டு சஞ்சிகைகள் உட்பட 3500 க்கும் அதிகமான நூல்களின் தொகுப்புகள்.
- மக்கள் இலக்கியத் தொகுப்புகள்.

மேலதிக விபரங்களுக்கு : 011-2685197

(இ)

'டியூஷன்' வகுப்புக்கள் அவசியமா? அவசியமற்றதா?

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

இன்று புதிய பாடத்திட்டமும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பினாலும் பாடசாலைகளில் காணப்படும் வளங்களும் பற்றாக்குறையாகவே காணப்படுகிறது. குறிப்பாக பல பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்கான திறமைமிக்க ஆசிரியர்கள் காணப்படுவதில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் டியூஷன் வகுப்புகள் அவசியமாகின்றன.

எம்.பாத்திமா முபஸ்ஸரா

இன்று டியூஷன் வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்வது பெரும்பாலும் கவர்ச்சியினால்தான். சில பெற்றோரின் கௌரவம் அப்பிள்ளைகளை இவ்வாறான டியூஷன் வகுப்புகளுக்கு செல்வதைத் தூண்டுகின்றது. பாடசாலையில் மாத்திரம் கற்று, எந்தவித பிரத்தியேக வகுப்புகளுக்கும் செல்லாமல் வீட்டிலேயே மீள் சுழற்சி முறையில் படிக்கும் எந்தவொரு மாணவரினதும் முயற்சி வெற்றியளிக்கும் என்பது நிச்சயம். எனவே, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு டியூஷன் வகுப்புகள் அவசியமில்லை என்பது எனது வாதம்.

-நூருல் முனா, குருணாகல்.

பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் திறமைமிக்க ஆசிரியரால் இலகுநடையில் மாணவர்களைக் கவரக்கூடிய வகையில் நடைபெறுமாயின், இக்கற்றலுக்கு டியூஷன் வகுப்புகள் அவசியமற்றது என நிச்சயம் கூறலாம். ஆனால், இதற்கு முரணான கற்பித்தல் இடம்பெறுமாயின், இங்கு கற்றலுக்கு டியூஷன் வகுப்புகள் அவசியப்படுகின்றன என உறுதியாக கூறுகிறேன்.

எஃப்.சஹ்லா, அப்புகஸ்தலாவை.

பாடசாலையில் வழங்கப்படும் நேரம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு போதாதவையாக இருக்கலாம். பாடங்கள் பற்றிய விளக்கம் குறைவாக இருக்கலாம். இவ்வாறான பிரச்சினைகளை டியூஷன் மூலமே நிவர்த்தி செய்யலாம். மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு டியூஷன் செல்வது அவசியமே.

எஃப்.ரிஃப்னா, அல்-அமான் வித்.,

பாடசாலையில் ஆசிரியர் தரும் பாடங்களை வீட்டில் வந்து ஒழுங்காக கற்றால் வேறு எந்த வகுப்பும் தேவையில்லை.

ஜெ.கஜந்தினி, யா/இராமநாதன் கல்.,

டியூஷன் வகுப்புக்களில் இன்று மாணவர்களுக்கு ஏற்றவகையில் அவர்களின் கல்வி அறிவுக்கு ஏற்ப விரிவாக கல்வி புகட்டப்படுகின்றது. இதனால், மாணவர்கள் டியூஷன் வகுப்புக்களில் கவனம் செலுத்துவது கூடிக்கொண்டே வருகின்றது.

பே.ஹர்சானா, திருகோணமலை.

இன்றைய கல்வித்துறையின் வளர்ச்சியில் பாடத்திட்டங்கள் மிகவும் சிக்கல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், அதனை விளங்கிக் கொள்வதில் மாணவர்கள் பெரும் சிரமமெடுக்கின்றனர். பாடசாலையில் ஒதுக்கப்படும் சிறியதொரு பாடவேளையில் இவற்றை அவர்களால் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. இதனால், சில முக்கியமான பாடங்களுக்காக மட்டும் 'டியூஷன்' வகுப்புகளைத் தொடரலாம்.

-பாத்திமா றிஸ்வானா ரவூப், ஹெம்மாதகம.

நான் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றத்தின் மூலம் மீண்டும் எனது பாடசாலையில் தரம்-9 இல் கற்கிறேன். அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் வேறு ஊர்களில் இருந்துதான் வருவார்கள். பாடசாலை நாட்களான ஐந்து நாட்களிலும் திங்கட்கிழமையில் ஆசிரியர்கள் 12 மணிக்கு வருவார்கள். வெள்ளிக்கிழமை 10 மணிக்குச் சென்றுவிடுவார்கள். மிகுதி 3 நாட்களில் அவர்கள் கற்பிப்பது போதுமானதா? எனவே, டியூஷன் வகுப்புகளுக்குச் செல்வது இந்நிலையில் அவசியமாகின்றது.

ஆர்.யசோதரன், முழங்காவில்

பாடசாலையில் கற்பிக்கும் பாடத்தை நன்றாகக் கவனித்தலும், அன்றைய நாள் படித்த அனைத்துப் பாடங்களையும் வீட்டில் சென்று மீண்டும் படித்தாலே போதும். பரீட்சையில் நல்ல புள்ளிகளை எடுத்து சித்தியடைய முடியும். எனவே, டியூஷன் வகுப்பு செல்வது அவசியமற்றது.

-சதாசிவம் தர்ஷிகா, உபதபால் அலுவலகம், பதுளை.

இந்த வாரத் தலைப்பு

பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகள் தனியார் வாகனங்களில் (Van) செல்வது நல்லதா? இல்லையா?

சுருக்கமாக ஒருசில வரிகள் தபாலட் டையில் மாத்திரம் (20.05.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்)

'விவாத மேடை', விஜய் த.பெ.2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதியோப்பியா

அரசு: ஒரு சட்ட சபைகொண்ட ஒரு கட்சிக்குடியரசு.

அமைப்பு: பாரம்பரிய அமைப்பு கி.மு.980 இல்; தற்கால நடைமுறை அரசியலமைப்பு -1991 இல் உருவானது.

தேசிய பெயர்: இடியோப்பியா பெடரலாவி டெமொக்ரசியாவி ரிபெப்லிக். (Federal Democratic Republic of Ethiopia)

தேசிய விடுமுறை தினம்: சுதந்திர தினமாகிய மே 28.

ஜனாதிபதி (2001): கிர்மா வூல்டேகியோர்கிஸ்.

பிரதமர் (1995): மெலஸ் ஸெனாவி.

புவியியல்

இதுவொரு கீழ் மத்திய ஆபிரிக்க நாடாகும். இதன் **மேற்கு**-சூடான்; **தெற்கு**-கென்யா; **கிழக்கு**-சோமாலியா மற்றும் ஜிபோடி என்பன எல்லைகளாக அமைந்துள்ளன. இங்கு பல உயர் மலைகள் காணப்படுகின்றன. அவற்றில்

மிக உயர்ந்த மலைச்சிகரம் 'ராஸ் டஷான்' என்பதாகும். இது 15,158 அடி உயரம் கொண்டது.

மொத்தப் பரப்பு: 435,186 சதுர மைல் (1,127,127 ச.கி.மீ).

நிலப்பரப்பு: 432,310 ச.மைல் (1,119,683 ச.கி.மீ).

தலைநகர் மற்றும் பெரிய நகரம் (2003): அட்டிஸ் அபாபா.

காலநிலை: உயர்நிலங்களில் குளிர் காலநிலையும் தாழ்நிலப் பிரதேசங்களில் அதிக வெப்பமும் நிலவுகின்றது.

மக்கள் தொகை (2008): 78,254,090.

நாணயம்: பிர்.

மொழிகள்: அம்ஹரிக், டிக்ரிக்னா, ஒரோமின்கா, க்வாரகிக்னா,சோமாலி, அரபு, ஆங்கிலம் மற்றும் 70 இற்கும் மேற்பட்டமொழிகள்.

இனங்கள்: ஒரோமோ 40%, அம்ஹரா மற்றும் டைக்ரீன் 32%, சிடமோ 9%, ஷன்கிலா 6%, சோமாலி 6%, அஃபார் 4%, குராகே 2%, ஏனையோர் 1%.

சமயம்: இஸ்லாம் 45%-50%, எதியோப்பியன் ஓர்தோடொக்ஸ் 35%-40%, எனிமிஸ்ட் 12%, ஏனையவை 3%-8%.

எழுத்தறிவு வீதம் (2003): 43%.

இணையத்தளக் குறியீடு: .et

தொலைபேசி இலக்கம்: 251.

தேசிய சின்னங்கள்: மலர்-கல்லா லிலி, மிருகம்-அபிசீனிய சிங்கம்; மரம், பறவை, விளையாட்டு என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.

தேசிய கீதம்:
Yäzegennät Keber Bä-Ityopp'yachen S'änto Tayyä Hezbawinnät Dar Eskädar Bärto. Läsälam Läfeteh Lähezboch Näs'annät; Bä'ekkulennät Bäfeqer Qomänal Bä'andennät...என ஆரம்பமாகின்றது.

வரலாறு

உலகின் மிகப் பழைமை வாய்ந்த மனிதன் எதியோப்பியாவிலேயே வாழ்ந்ததாக அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பழைமையான இம்மனிதர்களில் ஆர்டிபித்தகஸ் ரெமின்டஸ் கடப்பா எனும் 5.8 முதல் 5.2 மில்லியன் வருடங்கள் பழைமை வாய்ந்த மனிதர்களும் ஒஸ்ட்ராலோபித்தகஸ் எனமென்சிஸ் எனும் 4.2 மில்லியன் ஆண்டுகள் பழைமை வாய்ந்த மனிதர்களும் அடங்குவர். இந்நாட்டின் முன்னைய பெயர் அபிசீனியாவாகும்.

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் சின்ன ஆசியாவிலிருந்து இங்கு மக்கள் இடம் பெயர்ந்ததாக கருதப்படுகின்றது. கி.பி 341 இல் கிறிஸ்தவ மதம் இப்பிராந்தியத்தில் பரவியது. புராதன எதியோப்பியா 5 ஆம் நூற்றாண்டில் எழுச்சி பெற்று உன்னத நிலையை அடைந்திருந்தது. அதன்பின் அங்கு இஸ்லாம் பரவியது. பல போர்களால் எதியோப்பியா பலவீனமடைந்து ஈற்றில் வீழ்ச்சி அடைந்தது.

1880 இல் இத்தாலியின் ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டது. 1930 இல் ஹெய்லி செலாஸி சக்கரவர்த்திகளின் ஆட்சி ஆரம்பமாகியது. 1935 இல் மீண்டும் இத்தாலியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. 1941 இல் பிரித்தானியா இத்தாலியை வெளியேற்றியது. 1974 இல் சக்கரவர்த்தியை வெளியேற்றி மார்க்ஸிஸ்ட்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். 4 வருட பல்வேறு ஆட்சி மாற்றங்களின் முடிவில் 1995 இல் புதிய எதியோப்பிய ஜனநாயகக் கூட்டுக் குடியரசு உதயமானது.

கலாசாரம்

தேசிய இலச்சினை

பல்வேறு பாரம்பரியத்தைச் சார்ந்த பல இன மக்கள் எதியோப்பியாவில் வாழ்வதனால் எதியோப்பிய கலாசாரமானது பல்வேறு கலாசாரங்களின் கூட்டாகத் திகழ்கின்றது. பல்வேறு சம்பிரதாயங்களும் பெரியோருக்கு மரியாதை செலுத்துவதும் அங்கு முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படுகின்றது.


அட்டிஸ் அபாபா நகரின் ஒருபுறத் தோற்றம்

தொடர்பாடல்

தொலைபேசிகள் (2006): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்**-725,000; **செல்லிடத் தொலைபேசிகள்:** 866700.

வானொலி நிலையங்கள் (2001) : AM 8, SW 1.

தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்: 1


கற்குடைவு கிறிஸ்தவ தேவாலயங்கள்

ஒமோ பள்ளத்தாக்கு

இணையத்தள வழங்குனர்கள் (2005) : 89.

இணையத்தளப் பாவனையாளர்கள் : 164,000.

போக்குவரத்து

புகையிரதப்பாதைகளின் மொத்த நீளம்: 699 கி.மீற்றர். **பெருந்தெருக்களின் மொத்த நீளம்** (2004): 36,469 கி.மீற்றர். (இதில் செப்பனிடப் பட்டவை 6980 கி.மீ; செப்பனிடப்படாதவை 29489 கி.மீ). **துறையும் துறைமுகமும்:** எதியோப்பியா முற்றிலும் நிலத்தால் சூழப்பட்ட நாடாகத் திகழ்வதால் எரிட்ரியா மற்றும் ஜிபோடி ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான அஸ்ஸாப், மஸ்ஸாவா ஆகிய துறைமுகங்களை பயன்படுத்துகின்றது.

பொருளாதாரம்

விவசாயம் (பயிர்ச்செய்கை நிலம் 10%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நவதானியங்கள், கோப்பி, எண்ணெய் விதைகள், பருத்தி, கரும்பு, கிழங்கு வகைகள், பூக்கள், மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகள், மீன் வகைகள். **தொழிலாளர் தொகை** (1999): 27.27 மில்லியன். (விவசாயம் மற்றும் விலங்கு வேளாண்மை 80%, அரசு மற்றும் சேவைகள் 12%, கைத்தொழில் மற்றும் கட்டுமானப் பணிகள் 8%). **கைத்தொழில்கள்:** உணவு உற்பத்திப் பொருட்கள், புடவைகள், பான வகைகள், தோற்பொருட்கள், ரசாயனப் பொருட்கள், சீமெந்து, உலோகப் பொருட்கள். **இயற்கை வளங்கள்:** தங்கம், செம்பு, துத்தநாகம், பொட்டாசியம், இயற்கை வாயு, நீர்மின்வலு. **ஏற்றுமதிகள்:** கோப்பி, தங்கம், தோல் உற்பத்திப் பொருட்கள், உயிருள்ள மிருகங்கள், எண்ணெய் விதைகள். **இறக்குமதிகள்:** உணவும் உயிருள்ள விலங்குகளும், பெற்றோலியமும் பெற்றோல் உற்பத்திப் பொருட்களும், ரசாயனப்பொருட்கள், இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், தானிய வகைகள், புடவை வகைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ஜிபோடி, ஜேர்மனி, ஜப்பான், சவுதி அரேபியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், இத்தாலி, இந்தியா, சீனா.

பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✸ சொஃப் ஒமர் குகை ✸ ரிஃப்ட் பள்ளத்தாக்கு ✸ நீல நைல் நீர்வீழ்ச்சிகள் ✸ ஆவாஷ் தேசிய பூங்கா ✸ டானா ஏரி ✸ ஒமோ பள்ளத்தாக்கு மற்றும் வரலாற்றியல் இடங்கள் ✸ கொன்டார் கோட்டை மற்றும் நினைவுச் சின்னங்கள் ✸ கற்குடைவு கிறிஸ்தவ தேவாலயங்கள் ✸ எதியோப்பிய தேசிய நூதனசாலை.

நீல நைல் நீர்வீழ்ச்சிகள்

சொஃப் ஓமர் குகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் உலகயுத்தம் ஏன் நிகழ்ந்தது?

1914 ஆம் ஆண்டு முதல் 1918 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நான்கு வருடங்கள் முதலாம் உலக மகாயுத்தம் நிகழ்ந்தது. அன்றைய உலகின் சக்திமிக்க நாடுகள் யாவும் அந்த யுத்தத்தில் ஈடுபட்டமையால் அது உலக மகாயுத்தம் எனக் கூறப்பட்டது. ஒருபுறம் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் போரிட்டன. இவை 'நட்பு நாடுகள்' என்று அழைக்கப்பட்டன. அவற்றின் எதிரி நாடுகளாக ஜேர்மனி, ஆஸ்திரியா, பல்கேரியா ஆகிய நாடுகள் போரிட்டன. இவை 'மத்திய வலிமை பெற்றவை' என அழைக்கப்பட்டன.

இந்த யுத்தம் தரையிலும் விண்ணிலும் கடலிலும் நான்கு வருடங்களாக நடந்தது.

இப்போரில்தான் இங்கிலாந்து முதன்முறையாக 'யுத்தடாங்கி' போன்ற விசேட ஆயுதங்களைப் பாவித்தது. இந்த யுத்தத்துக்கு மூலகாரணம் 1870 இல் நிகழ்ந்த 'பிரங்கோ பிரஷியா' யுத்தமேயாகும். இந்த யுத்தத்தில் அல்ஸாஸ், லொரேன் எனும் தனது இரு பிரதேசங்களை பிரான்ஸ் ஜேர்மனியிடம் இழந்திருந்தது. அதற்காக ஜேர்மனியைப் பழிவாங்கவே பிரான்ஸ், இங்கிலாந்தையும் ரஷ்யவையும் போருக்குள் இழுத்துவிட்டது.

காலனித்துவ ஏகாதிபத்திய நாடான இங்கிலாந்துக்கு ஜேர்மனியின் விஸ்தரிப்புக் கொள்கை பிடிக்கவில்லை. அத்துடன், ரஷ்யாவும் ஜேர்மனியின் விஸ்தரிப்புக் கொள்கைக்கு அஞ்சியது. இதுவே பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யக் கூட்டுக்கு முக்கிய காரணமாக அமைந்தது. அப்போது ஆஸ்திரியா, ஜேர்மனியின் அணியிலும் சேர்பியா இங்கிலாந்தின் அணியிலும் இருந்தன. 1914 ஜூன் 28 ஆம் திகதி சேர்பியா ஆஸ்திரிய இளவரசன் பார்டினன்டைக் கொன்றது. அதற்கு மன்னிப்புக் கோர வேண்டுமென்றும் நஷ்டாடு வழங்க வேண்டும் என்றும் சேர்பியாவுக்கு ஆஸ்திரியா நிபந்தனை விதித்தது. எனினும், இங்கிலாந்து அணியின் தூண்டுதலால் ஆஸ்திரியாவின் நிபந்தனைகளை சேர்பியா முற்றாக மறுத்துவிட்டது. இதனால், ஆத்திரமுற்ற ஆஸ்திரியா சேர்பியாவுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது.

இதை எதிர்பார்த்திருந்த இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யக் கூட்டணி 1914 ஜூலை 28 ஆம் திகதி ஆஸ்திரியாவைத் தாக்கின. பதிலுக்கு ஆஸ்திரியாவைக் காக்க ஜேர்மனியும் பல்கேரியாவும் களத்தில் குதித்தன. முடிவில் இங்கிலாந்து அணி இப்போரில் வெற்றி அடைந்தது. (ரு)

வரி அறவீடு எப்போது ஆரம்பமாகியது

'வரியும் மரணமும் அனைவருக்கும் உரித்து' என்றொரு பழமொழி உண்டு. ஆதிகாலம் முதல் பல்வேறு வகைகளில் வரிகள் அறவிடப்பட்டிருக்கின்றன.எனினும், அக்காலத்தில் அறவிடப்பட்ட வரி முறைக்கும் தற்போது அறவிடப்படும் வரிமுறைக்குமிடையில் பாரிய வித்தியாசம் உண்டு.

அக்கால மனிதன் பாவனைப் பொருட்களையே வரியாகச் செலுத்தினான். சில வேளைகளில் வரிக்குப் பதிலாக

ஊழியம் புரியவும் நேர்ந்தது. அத்துடன், அக்கால ஆட்சியாளர்களே வரிகளை விதித்தனர். இவ்வாறு விதிக்கப்பட்ட வரிகள் எளியவர்களை வருத்திப் பிழிந்தன. தாழ் குலத்தவரிடம் வசூலிக்கப்படும் வரிகள் உயர்குலத்தவரின் நலன்களுக்காகச் செலவிடப்பட்டமையும் உண்டு.

புராதன காலத்தில் எகிப்திலும் ரோமபுரியிலும் வரிகள் அறவிடப்பட்டன. இத்தகைய வரிகள் வருமானத்தையும் செல்வ வளத்தையும் மதிப்பீடு செய்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

அக்கால மக்கள் அனைவரும் கண்டிப்பாக வாழவும் நுகரவும் வரி செலுத்தவேண்டும். இயலாதவர்கள் ஊழியம் செய்ய வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர். தற்போதும் உலகில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சிகளே அமையப் பெற்றுள்ளபோதும் அவற்றுக்கும் பிரஜைகள் அநேக வகை வரிகளைச் செலுத்தியே வருகின்றனர். எனினும், அவர்கள் விருப்புடன் வரிகளைச் செலுத்துவதாகக் கூறமுடியாது. வரி அறவீட்டுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்த பல சம்பவங்களும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. பிரெஞ்சு புரட்சியும்

அமெரிக்கப் புரட்சியும்கூட ஒரு வகையில் வரி அறவீட்டினால் ஏற்பட்டவையே எனலாம்.

அத்துடன், நமது நாட்டில் ஆட்சி அதிகாரத்துக்காக அரச அதிகாரிகள் 1818 ஆம் ஆண்டு கண்டியில் ஆங்கிலேயருக்கெதிராகப் புரட்சி செய்தார்கள். எனினும், 1848 இல் மக்கள் புரட்சி செய்தது வரி அறவீட்டு முறைக்கு எதிராகவே எனலாம். 1798 ஆம் ஆண்டிலிருந்தே இங்கிலாந்தில் வருமான வரி அறவிடும் முறை உருவாகியது. 1914 இல் நிகழ்ந்த முதலாவது உலக மகா யுத்தகாலத்திலிருந்துதான் அமெரிக்கா இறக்குமதிப் பொருட்களுக்கான வரியை அறவிட்டது.

ஏ.ஜே.எம்.நிழாம்

THE GREATEST

மேதைகள் அபூர்வமானவர்கள்.
அரிதாகவே பிறக்கும் அவர்கள் சமுதாயத்தின்
சிந்தனையை மாற்றுகின்றனர். அவர்கள் மறைந்த பின்னரும்
அவர்களது சொற்களும் செயல்களும் வாழ்கின்றன. அத்தகைய
மேதைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய சஞ்சிகை... The Greatest

The Greatest வாராந்த சஞ்சிகையாக Daily Mirror
பத்திரிகையுடன் இலவசமாக வழங்கப்படுகிறது

வெள்ளிதோறும், சிறுவர் அலைவரிசையும் அறிவுக்கு விருந்தாகும்
12 இதழ்களாக மே 5 ஆம் திகதி முதல்
வாராந்தம் வெளியாகும்

GREATEST வாசியுங்கள். DailyMirror வாங்குங்கள்.
அருகிலுள்ள Daily Mirror விநியோகஸ்தரிடம் உங்கள் பிரதியை முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

Physicists | Poets | Philosophers | Chemists | Astronomers | Novelists
Olympians | Explorers | Singers | Leaders | Inventors | Mathematicians

இவர்கள் அனைவரும் தத்தமது துறையில் அபாரமான சாதனை படைத்தவர்கள்.

DailyMirror

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாத்தாள் I

சுட்டெண்: ..... நேரம்: 45 நிமிடங்கள்

★ 01 முதல் 02 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் உருக்கள் உள்ள மூன்று அடைப்புக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று ஏனைய உருக்களில் இருந்து வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. அவ்வாறு வேறுபடும் அடைப்பைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை எதிரே காணப்படும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

01.



(.....)

02.

(.....)

★ 03 முதல் 04 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்ட கணிதச் செய்கைகளின் அடிப்படையில் கிடைக்கப்பெறும் பெறுமானத்திற்கு அமைய மூன்று தொகுதிகள் மட்டும் ஒரே விடையாக அமையக்கூடியது. இரண்டு தொகுதிகள் வித்தியாசமானவை. அவ்வாறு வித்தியாசமான தொகுதியைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

03.



(i) AB (ii) BA (iii) DC

04.



(i) AB (ii) DE (iii) BD

★ 05 முதல் 06 வரையிலான வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள படத்தை மேலிருந்து கீழாகப் பார்க்கும்போது அது தோன்றும் நிருத்தமான விதத்தை எதிரேயுள்ள மூன்று உருக்களிலிருந்து தெரிவு செய்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

05.



(i) (ii) (iii)

06.



(i) (ii) (iii)

★ இங்கு தரப்பட்ட படங்களுக்கிடையிலான தொடர்பின் அடிப்படையில் அதன்கீழ் தரப்பட்டுள்ள படத்துடன் தொடர்புடைய படத்தைத் தெரிவு செய்து கோடிடுக.

07.



★ கீழே கட்டங்களில் சில சொற்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சொல் ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. அச்சொல்லைக் குறிக்கும் கட்டத்திற்குரிய இலக்கத்தின் கீழ்க் கோடிடுக.

08.

சினேகிதன்	விவேகன்	நண்பன்	தோழன்
(i)	(ii)	(iii)	(iv)

09.

அவா	ஆசை	விருப்பு	கிரமம்
(i)	(ii)	(iii)	(iv)

★ கீழே இடமிருந்து வலமாகத் தரப்பட்ட ஒற்றை எண்கள் வரிசையில் முறையே சிவப்பு, கறுப்பு, பச்சை என்ற ஒழுங்கிலும் கீழிருந்து மேலாகத் தரப்பட்ட இரண்டின் மடங்குகள் வரிசையில் முறையே நீலம், மஞ்சள் என்ற ஒழுங்கிலும் அமையும். இதன் அடிப்படையில் 10 முதல் 12 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.



சி - சிவப்பு
க - கறுப்பு
ப - பச்சை
நீ - நீலம்
ம - மஞ்சள்

10. A என்ற இடத்தில் வரவேண்டிய நிறம் யாது?
(i) மஞ்சள் (ii) கறுப்பு (iii) நீலம்

11. B என்ற இடத்தில் வரவேண்டிய நிறம் யாது?
(i) சிவப்பு (ii) கறுப்பு (iii) பச்சை

12. இங்கு அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ள நிறம் யாது?
(i) நீலம் (ii) மஞ்சள் (iii) சிவப்பு

★ 13 முதல் 14 வரையிலான வினாக்களுக்கு விடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்து, சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

13.



(i) 40 (ii) 56 (iii) 63

14.



(i) 35 (ii) 40 (iii) 45

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

வினாத்தாள் II இன் விடைகள்

(ஏப்ரல் 28, மே 5 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

(01) (i) டெங்கு, மூளைக்காய்ச்சல். (ii) அமோபிலிஸ் நுளம்பு
(iii) சுகதேகி (iv) ஆரம்பிக்கும்
(v) கொடிய நோய்கள்/நுளம்பினால் பரவும் நோய்கள்
(vi) மேல் நிலைத்தொட்டிகள், திறந்திருக்கும் கிணறுகள், தேக்கி வைக்கப்படும் தண்ணீர்
(vii) வெந்நீர் (viii) நோயாளிகள்/ஆய்வாளர்கள்
(ix) மாலையிலும் இரவிலும் தங்களது நோயை பரப்ப ஆரம்பிக்கும்.
(x) மாலையிலும் இரவிலும்

(02) (i) மின்னஞ்சல் (ii) கணினி

(03) (i) அறுபதாவது ஆண்டு (ii) தொண்ணூறாவது ஆண்டு

(04) (i) நாங்கள் கண்டிக்குச் செல்லப் புறப்பட்டோம்.
(ii) அவர்கள் தம்பியை பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

(05) (i) கோடரி (ii) ஊற்று

(06) (i) Post office (ii) Railway Station (iii) Police Station

(07) (i) உனக்கு என்ன விருப்பம்?
(ii) தயவு செய்து உங்கள் புத்தகத்தைத் திறவுங்கள்.

(08) (i) அப்பா பால் குடியுங்கள் (ii) அண்ணா இடியப்பம் சாப்பிடுங்கள்
(iii) சிறிய தங்கை வாருங்கள்

(09) 2	(10) 3	(11) 3	(12) 1	(13) 2	(14) 2
(15) 1	(16) 1	(17) 1	(18) 3	(19) 3	(20) 3
(21) 2	(22) 1	(23) 3	(24) 2	(25) டீ.எஸ்.சேனாநாயக்க	
(26) டி.பி.ஜாயா		(27) சேர்.பொன்.இராமநாதன்			
(28) C.W.W கன்னங்கர		(29) டி.பி.ஜயதிலக		(30) வீணை	
(31) உடுக்கை		(32) மலோடிக்கா		(33) தபேலா	
(34) றபான்		(35) கஸ்பர் வில்		(36) மூங்கில் மரச்சாடி	
(37) உருளும் வண்டி		(38) சீனப்பட்டம்		(39) பம்பரம்	
(40) 1725ml		(41) 36		(42) 39	
(43) 39		(44) 3.6cm		(45) 1.1cm	
(46) 3.1cm		(47) 2cm		(48) i. 5 ii. 8	

(49)



(50) பேனாக்கள் (51) ஞாயிறு
(52) வெள்ளி (53) 40
(54) ரூபாய் 340.00

(55) ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களுக்கு குறையாமலும் எழுவாய், பயனிலை, இயைபு திருத்தமானதாகவும் அமைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகெங்கும் அனுஷ்டிக்கப்படும் நைட்டிங்கேல் பிறந்தநாள்

ஆரோக்கியம், உலகின் சிறந்த செல்வம் என்று நமது முன்னோர்கள் குறிப்பிடுவர். ஆரோக்கியமான வாழ்க்கைக்காக நாம் பலவிதமான முயற்சிகளை மேற்கொள்கின்றோம். எனினும், நோய்களில் இருந்து தப்பியிருக்க எவ்வளவுதான் முயற்சித்தாலும் அது சாத்தியமில்லாத விடயமாகவே இருக்கின்றது.

நோய்வாய்ப்படும்போதெல்லாம் மருத்துவ சேவைகளே எமக்கு உதவி புரிகின்றன. மருத்துவர்கள் மருத்துவம் செய்கின்றவேளை, நோயாளிகளைப் பராமரிக்கும் வேலைகளை தாதிகளே செய்கின்றனர். அதன்படி, மருத்துவத்துறையில் 'தாதியர் சேவை' இன்றியமையாததாகிவிட்டது.

விளக்கேந்திய பெருமாட்டி

விளக்கேந்திய பெருமாட்டி என பின்னாளில் சிறப்பித்துக் கூறப்பட்ட ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் தாதியர் சேவைக்கு ஆற்றிய பெரும் சேவையினைக் கௌரவிக் கும்பொருட்டே அவர் பிறந்த தினமான மே 12 ஆம் திகதி 'சர்வதேச தாதியர் தினம்' என பிரகடனப்படுத்தப்பட்டது. 1820 மே மாதம் 12 ஆம் திகதி இத்தாலியின் ஃப்ளோரன்ஸ் நகரில் செல்வந்த குடும்பமொன்றில் தான் ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்தார். இவரின் தந்தை வில்லியம் எட்வர்ட் நைட்டிங்கேல் ஆவார். தாய் ஃப்ரென்சிஸ் ஸ்மித் என்பவராவார். ஃப்ளோரன்ஸ் தனது இளமைப் பருவத்தை இங்கிலாந்திலுள்ள டேபிசயர், ஹம்சயர், லண்டன் போன்ற இடங்களில் பெற்றோருடன் கழித்தார்.

செல்வந்த வாழ்வினை விரும்பாத ஃப்ளோரன்ஸ், தாதியத்தை பயில ஆசைப் பட்டார். எனினும், அக்காலத் தில் தாதியத் தொழிலுக்கு சமூகத்தில் பெரிய அந்தஸ்து இருக்கவில்லை என்பதனால், ஃப்ளோரன்ஸின் விருப்பத் திற்கு பெற்றோர் மறுப்புத் தெரிவித்தனர். எவ்வாறாயி னும், அவர்களின் எதிர்ப் புக்கு மத்தியிலும் ஃப்ளோரன்ஸ் தாதியர் கற்கை நெறியை மூன்றாண்டுகளில் நிறைவு செய்து, நோயாளர் களுக்கு மருத்துவம் செய்வதிலும் அவர்களைப் பராமரிப் பதிலும் நிபுணத்துவம் பெற்றார்.

அத்துடன், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பல மருத்துவமனைகளுக்குச் சென்று பார்வையிட்டதோடு, ஜேர்மனி கெயிசர்ஸ்வேர்த்திலுள்ள புரட்டஸ்தாந்து-டிகொன்ஸன் நிறுவனத் தில் இணைந்து முழு நேரத் தாதியர் பயிற்சியைப் பெற்றார். 1854 இல் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக தொடுத்த போரினால் காயமடைந்த போர் வீரர் களுக்கு உதவும்பொருட்டு 38 தாதியரு டன் ராணுவ மருத்துவமனைக்குச் சென்றார். பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ராணுவ வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்கினார்.

இரவு வேளைகளில் விளக்கு ஒன்றினைக் கையில் ஏந்தியவாறு காய மடைந்த படையினரைப் பார்வையிடும் வழக்கத்தினை கொண்டிருந்தார். இதனால், அங்கிருந்தவர்கள் அவரை விளக்கேந்திய பெருமாட்டி (Lady with the lamp) என்று சிறப்பித்துக் கூறினர். 1856 இல் போர் ஓய்ந்து, காயமடைந்த போர் வீரர்கள் அனைவரும் குணமடைந்து சென்றதன் பின்னர் ஃப்ளோரன்ஸ் இங்கிலாந்து திரும்பினார். தாதியத் துறைக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றிய ப்ளோரன்ஸ், 1910 ஓகஸ்ட் 13 ஆம் திகதி தனது 90 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

போரில் காயமடைந்த வீரர்களுக்கு உதவும் காட்சியை சித்தரிக்கும் ஓவியமொன்று

நர்ஸ் (தாதி) என்ற பெயர் ஏற்பட்ட விதம்

'நர்ஸ்' (Nurse) எனும் சொல் 'நியுட்ரிக்கஸ்' (Nutriccus) என்ற லத்தீன் சொல்லின் திரிபாகும். லத்தீன் மொழியில் இந்த சொல்லுக்குப் போஷிப்பது, உதவுவது, பாதுகாப்பது போன்ற அர்த்தங்கள் கொள்ளப்படு கின்றன.

ஆரம்பகால தாதியம்

பண்டைய காலத்தில் இத்துறையில் சிறந்த பயிற்சி பெற்ற தாதியர்கள் இருக்கவில்லை. மருத்துவர்கள் மருத்துவம் செய்யும்போது தாதியர் பணியினை வீட்டில் இருக்கும் பெண் களும் அடிமைகளுமே மேற்கொண் டனர். 17 ஆம் நூற்றாண்டில் பெரிஸ் நகரில் 'ஆகஸ்தியன் சகோதரர்களின் சபை' என்ற பெயரில் தாதியர் சேவைக் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டது.

தாதியர் சேவை சிறிது சிறிதாக 19 ஆம் நூற்றாண்டில் முன்னேறியதுடன், தியடோர் ப்ளிடினர் எனும் பாதிரியாரும் அவரது துணைவியாரும் இணைந்து இந்த சேவையை ஓரளவுக்கு விரிவுபடுத்தினர். தியடோர் ப்ளிடினர் பாதிரியாரினாலும் அவரது மனைவியினாலும் ஆரம்பிக்கப்பட்ட தாதியர் அமைப்பிலும் ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் பயிற்சி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஃப்ளோரன்ஸின் கல்லறை

சர்வதேச தாதியர் அமைப்பு (ICN)

உலகில் தாதியர் சேவை தொடர் பாக ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சர்வதேச தாதியர் அமைப்பு (International Council of Nurses) ஆகும். 1899 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, 128 நாடுகளின் அங்கத்துவத்தினைப் பெற்றுள்ளது.1943இல் இலங்கையும் இந்த அமைப்பின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டது.இந்த அமைப்பின் தலைமைப் பதவியினை ஹிரோஹோ மினாமி (Hiroho Minami) என்பவர் வகிக்கின்றார்.

மே 12 சர்வதேச தாதியர் தினம்

லண்டன், வோட்டர்லூ ஒழுங்கையில் அமைந்துள்ள நினைவுத்தூபி

தாதியர் சேவை பற்றிய அறிவு, ஆற்றல்,அனுபவத்தினை அதிகரித்தல், ஆலோசனைகளை வழங்குதல், கொள்கைத் திட்டமிடல் ஆகிய பல்வேறு விடயங்கள் இந்த அமைப் பினால் உலகெங்கும் முன்னெடுக்கப் படுகின்றன. இன்று தாதியர் சேவை உயர் மட்டத்தில் உள்ளது. சர்வதேச தாதியர் சேவை, தாதிப் பட்டப்படிப்பு என்று இந்த சேவை விரிவடைந்துள் ளதுடன், இலங்கையிலும் தாதிப் பட்டதாரிகள் பலர் உள்ளனர். தாதியர் பணி நோயாளிகளுக்கு சேவையாற்றுவதுடன் மட்டும் நிறைவடைவதில்லை. சமூகத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாப்பது, நோய் நிலைமைகளிலிருந்து விடுபட உதவுதல், சுகாதாரக் கல்வியினைப் பெற்றுக்கொடுத்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல் என பல்வேறு கோணங்களில் இந்த சேவை விரிவடைகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவி வெப்பம் அதி

எமது ஞாயிற்றுத்தொகுதியில் புவியில் மட்டுமே உயிரினங்கள் உள்ளன. ஏனைய கிரகங்களில் உயிரினங்கள் வசிப்பதற்கான உறுதியான சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இப்பொழுது நிலவும் அனுமானங்களை உறுதிப்படுத்திக்கொள்ள பல ஆண்டுகள் செல்லலாம் என்று கூறப்படுகின்றது.

சில கிரகங்களில் நிலவும் அதிகமான வெப்பமும் இன்னும் சில கிரகங்களில் நிலவும் அதிகமான குளிரும் அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தவில்லை என்றே கருதப்படுகின்றது. ஆனால், இவ்வனைத்து கிரகங்களிலும் நிலவாத, உயிரினங்களின் வாழ்வுக்கு ஏற்ற சிறப்பான தன்மை பூமியில் மட்டுமே நிலவுகின்றது. அந்தவகையில், உயிரினங்களின் வாழ்வுக்கு ஏற்புடைய கிரகமாக பூமியே திகழ்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

எனினும், இந்நிலை தற்போது கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றது. அதன் விளைவாக சீரான காலநிலையில் ஏற்படும் அதிரடி மாற்றங்களைக் குறிப்பிடலாம். இதன் பெறுபேறுகளாக இயற்கை அனர்த்தங்கள், உயிரினங்களின் அழிவுகள் என்பன ஏற்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் பிரதான காரணமாக அமைந்திருப்பது புவி வெப்பநிலை விரைவாக அதிகரித்துச் செல்கின்றமை ஆகும்.

புவி வெப்பமடைதல் என்றால்....

பூமியின் சராசரி வெப்பநிலையானது பூமியின் மேற்பரப்பிலும் காற்றிலும் நீர்நிலைகளிலும் அதிகரித்துச் செல்வதையே புவி வெப்பமடைதல் என்கிறோம்.

பூமியில் 0.74°C வெப்பம் கடந்த நூற்றாண்டில் உயர்ந்துள்ளது. ஐ.நா. வின் பருவநிலை மாற்றத்துக்கான சர்வதேச கூட்டமைப்பு (UNFCCC) அறிக்கையின்படி, பூமியிலிருந்து வெளியேறும் மாசுக்களால்தான் புவி வெப்பமடைகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

18 ஆண்டுகளாக அமெரிக்காவின் நாஸா நிறுவனம் புவி வெப்பமடைவதை அளவிட்டு வருகிறது. இந்த ஆய்விலும் புவி வெப்பமடைவது கண்டறியப்பட்டுள்ளது.

மனிதனின் மோசமான செயற்பாடுகளின் விளைவுகளாலேயே இந்த நிலை ஏற்படுகின்றது. வளிமண்டல வெப்பநிலை உயர்வடைந்து சூழல் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. காபனீரொட்சைட்டின் அதிகரிப்பே வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கின்றது.

பூமியின் சராசரி வெப்பநிலை 13.8°C முதல் 14.6°C ஆகும். பூமியின் வெவ்வேறு பகுதிகளில் நிலவும் வெப்பநிலையின் சராசரி அளவே இது. சஹாரா பாலைவனத்தில் 58°C வரை வெப்பம் இருக்கும். அதுவே துருவப்பகுதியில் (-25°C) ஆக இருக்கும். இந்தியா உள்ளிட்ட பூமத்திய ரேகைப் பகுதியில் உள்ள நாடுகளின் சராசரி வெப்பநிலை 25°C ஆகும். கார்பன் உள்ளிட்ட மாசு வெளியேற்றத்தால், பூமியின் ஒட்டுமொத்த வெப்பநிலையில் 4°C வெப்பம் அதிகரித்தால், பூமியின் ஒவ்வொரு பகுதியிலும் சராசரி வெப்பநிலையில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிக்கின்றது...!

புவி வெப்பமடைதல் மனிதனைப் பாதிக்குமா?

2003 ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அதிக வெப்பத்தினால் பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜேர்மனியில் 35000 பேர் மரணமடைந்ததுடன், பெருமளவானோர் சரும நோய்களுக்கும் உள்ளாகினர்.

2007 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பிரித்தானியாவில் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கு ஆயிரக்கணக்கான மக்களை நெருக்கடியில் ஆழ்த்தியிருந்தது. இது உலக வெப்பமாதலினால் ஏற்பட்டது என்று பிரித்தானிய பிரதமர் கோடன் பிறவுன் அப்போது தெரிவித்திருந்தார்.

அத்துடன், அதே ஆண்டு அதே மாதத்தில் ஹங்கேரியாவில் அதிக வெப்பத்தினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 600 இற்கும் அதிகமாகும். இந்தியாவிலும் அடிக்கடி இவ்வாறான மரணங்கள் நிகழ்கின்றன. 2003 இல் அதிக வெப்பத்தினால் பிரான்ஸில் 1080 பேர் மரணமடைந்தனர். 2007 ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பினால் பங்களாதேஷில் 12 பேரும் இந்தியாவில் 30 பேரும் மரணமடைந்தனர். 2050-2060 காலப்பகுதிகளில் இந்த வெப்பநிலை உச்சநிலையாக மாறுவதற்கு வாய்ப்புகள் உண்டு என்றும் சில புவியியல் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

"மனித செயற்பாடுகளினாலேயே புவியின் வெப்பநிலை அதிகரித்து வருகின்றது. இதன் தீய விளைவுகளை மனிதனே அனுபவிக்க நேரிடும்" என்று அவர்கள் மேலும் எச்சரித்துள்ளனர்.

கடல் வெப்பநிலை உயர்வு

அமெரிக்காவின் கடல் மற்றும் வளிமண்டல கட்டுப்பாட்டுப் பிரிவின் சிட்னி லெவிட்ஸ் தலைமையிலான குழுவினால் 1948-98 வரையான காலப்பகுதியில் கடல் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி; கடல் மேற்பரப்பிலிருந்து 300 மீற்றர் ஆழம் வரையான பகுதிக்குரிய வெப்பநிலை அதிகரிப்புக்கு ஏதுவான பிரதான காரணகர்த்தாவாக மனிதனே திகழ்கின்றான் என தெரியவந்துள்ளது.

கடல் வெப்பநிலை உயர்வு பூமியில் உயிரினங்களின் இருப்புக்கு ஆபத்தாகும். வெள்ளம், வறட்சி, தீவுகள் நீரில் மூழ்குதல் என்பன இதனால் ஏற்படுகின்றன. கடல் வெப்பநிலை உயர்வினால் பனிப்பாறைகள் உருகி, கடல்நீர் மட்டம் உயரும். இந்நிலைக்கு விரைவில் தீர்வு காணாவிடின், 2100 ஆம் ஆண்டளவில் கடல் மட்டம் 8480 மி.மீ ஆக உயரும் என IPCC கூறுகின்றது.

கடல் வெப்பநிலை உயர்வினால் ஏற்படும் பாதிப்புகளால் பெரும்பாலும் கடும் சூறாவளி ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை இச்சூறாவளி நிலைமை ஏற்படும். பவளப்பாறைகள் பாதிப்படையும். இதனால், மீன்வளம் பாதிப்புறும்.

பச்சை வாயு

பச்சை வீட்டு வாயு செயற்பாட்டினால் புவியின் வெப்பநிலை உயர்கின்றது. தொழிற்சாலைக் கழிவுகள், காடுகள் அழிப்பு, விமான செயற்பாடுகள், குளிரூட்டிகளின் பயன்பாடு, காடு எரிப்பு, அணு நிலையங்களின் செயற்பாடுகள் என்பன இதற்கு முக்கிய காரணங்களாகும்.

ஓசோன் படலம் பாதிப்பின் விளைவுகள்

புவிக்குக் கிடைக்கும் சூரிய ஒளியை 'ஓசோன்' படலம் வடிகட்டி பூமிக்கு அனுப்புகின்றது. இந்த செயற்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டால், அது பூமியின் வெப்பநிலை அதிகரிப்புக்கு காரணமாக அமைவதுடன் பலதரப்பட்ட நோய்களுக்கும் காரணமாக அமையும்.

21 ஆம் நூற்றாண்டின் சூழல் பிரச்சினைகள்

ஐ.நாவின் சுற்றுப்புறச் சூழல் நிகழ்ச்சித்திட்டத்தின் விஞ்ஞானிகள் மற்றும் நிபுணர்கள் 200 பேர் 21 ஆம் நூற்றாண்டின் மிக முக்கிய சூழல் பிரச்சினைகளை கட்டிக்காட்டியுள்ளனர்.

அவையாவன;

- காலநிலை மாற்றம்
- நீர் வறட்சி
- காடுகள் அழிப்பு
- பாலைவனமாதல்
- நீர் மாசடைதல்
- மரபணு மாற்றம்
- குப்பைகளை வெளியேற்றும் பிரச்சினை
- காற்று மாசடைதல்
- மண்ணரிப்பு
- சூழல் சமநிலை சீர்குலைவு
- ரசாயன மாசு
- நகரமயமாதல்
- ஓசோன் துவாரம்
- எரிபொருள் பாவனை அதிகரிப்பு
- இயற்கை வளங்களின் அதீத பயன்பாடு
- உயர் பல்வகைமைச் சக்கரம் மாறுதல்
- தொழில்நுட்ப அதிகரிப்பு
- இயற்கை அனர்த்தம்
- புதிய உயிர்களின் அறிமுகம்
- மரபணுத் தொழில்நுட்பம்
- கடல் மாசு
- வரையறையின்றி மீன்களைப் பிடித்தல் அல்லது அழித்தல்
- கடல் அலைகளில் மாற்றம்
- கடல்மட்டம் உயர்தல்
- எல்நினோ

எனவே, இவ் அனைத்தையும் கருத்தில்கொண்டு செயல்படுவது காலத்தின் மிக முக்கிய தேவையாக உள்ளது. (இ)

'1948-98 வரையான காலப்பகுதியில் கடல் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி; கடல் மேற்பரப்பிலிருந்து 300 மீற்றர் ஆழம் வரையான பகுதிக்குரிய வெப்பநிலை அதிகரிப்புக்கு ஏதுவான பிரதான காரணகர்த்தாவாக மனிதனே திகழ்கின்றான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையே! மழையே!

மழையே! மழையே!
என்னைத் தொட்ட மழையே
சின்னச் சின்னத் துளிகளாய் - நீ
நிலத்தில் விழுந்து சிதறினாய்
நீ விழுந்து சிதறியபோது
என் இதயமும் சிதறியது
சின்னச் சின்னத் துளிகளாய் நீ
நிலத்தில் விழுந்து சிதறினாலும்
மண்ணில் நாம் சீருடன் வாழ்ந்திட
செல்வத்தை அள்ளி வழங்குகிறாயே
வாழ்க நீ என்றென்றும்
வனம் தருவாய் என்றென்றும்
என வாழ்த்துகிறேன் வாழி நீ!

ஜே.சத்யா,
தரம் - 7[G], புனித அன்னம்மாள் ம.ம.வித்.,

விடுகதைகள்

1. உடல் எல்லாம் பல் உள்ளவன்; ஒருநாளும் கடிக்கமாட்டான். அவன் யார்?
2. கேட்காமல் ஊசி போடுவான்; காசு வாங்காமல் ஓடிப்போவான். அவன் யார்?
3. உயரமான தோட்டத்தில் ஒளிந்திருப்பான் கறுப்பானவன். அவன் யார்?
4. கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும். நம்மால் பார்க்க முடியாது. அது என்ன?
5. தொடாமலே சிணுங்குவான்; தொட்டால் அடங்குவான். அவன் யார்?

விடைகள்

1. சீப்பு 2. நுளம்பு 3. பேன்
4. முதுகு 5. தொலைபேசி

மரங்கள்

மரங்களை என்றும் அழிக்காதே
பயன்தரும் அவற்றை வாழவிடு
அவை பூமியில் இருப்பதால்தான்
நாமும் நலமுடன் வாழ்கின்றோம்
அவை தருகின்ற உணவால்தான்
நாமும் பசிப்பிணி போக்குகிறோம்.
அவை பூமியில் வாழ்வதால்தான்
நல்ல சூழல் கிடைக்கின்றது.
அவைகளை இனியும் அழித்திடாமல்
புதிதாக விதைகளை விதைத்திடுவோம்
மரங்களின் பயனைப் பெற்றிடுவோம்.

ந.சதீஷ்காந்த்,
தரம் - 9[B](2006),இந்துக் கல்.,யாழ்ப்பாணம்.

ஏழையின் கண்ணீர்

ஓர் ஊரில் கந்தசாமி எனும் செல்வந்தர் ஒருவர் தன் குடும்பத்துடன் உல்லாசமாக வாழ்ந்து வந்தார். அவர் செல்வந்தராக இருந்தாலும் இல்லாதவர் களுக்கு கொடை வழங்கவோ, தன்னிடம் கையேந்தி வருபவர்களுக்குத் தானம் வழங்கவோமாட்டார்.

ஒருநாள் பக்கத்து ஊரிலிருந்து ஓர் ஏழை மனிதர் செல்வந்தர் கந்தசாமி வீட்டுக்கு வந்தார். கந்தல் உடையுடன் ஒருவர் தன் வாசற்படியில் நிற்பதைக் கண்ட கந்தசாமி அவரை வெளியே போகும்படி கூறித் தள்ளிவிட்டார். கீழே விழுந்த அந்த மனிதர் எழுந்து, ''நான் ஒரு ஏழை எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்க முடியாத நிலையில் இருக்கிறேன். குழந்தைகள் கண்ணீர் வடிக்கின்றன. அதனால்தான் உங்களைத் தேடி வந்தேன்.

ஏதாவது தர்மம் செய்யுங்கள் ஐயா'' என்று அந்த ஏழை மனிதர் கெஞ்சினார். அதற்குக் கந்தசாமி ''உனக்குத் தருவதற்கு என்னிடம் எதுவும் இல்லை. இங்கிருந்து சென்று விடு'' என்றார். எனினும், அந்த மனிதர் கந்தசாமியிடம் மேலும் மேலும் கெஞ்சிப் பார்த்தார்.

கந்தசாமி அவர்மீது இரக்கப்படவே இல்லை. இறுதியில் அந்த மனிதர் ஐயா பெரிய செல்வந்தராக இருந்துகொண்டு எதுவும் இல்லை என்கிறீர்களே. நீங்கள் சொல்வது போலவே ஒருநாள் இந்தச் செல்வம் எல்லாம் அழிந்து எங்களைப் போன்று ஆகி விடுவீர்கள்'' என்று வேதனையுடன் கூறினார். அதற்குக் கந்தசாமி ''எனது செல்வம் ஒருபோதும் அழியாது. எனக்குப் பஞ்சம் ஒருபோதும் ஏற்படாது'' என்று உறுதியாகக் கூறினார். அதற்கு அந்த மனிதர் ''காலம் என்றும் ஒரே மாதிரியாக இருக்காது'' என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

நாட்கள் உருண்டோடின. ஒருநாள் கந்தசாமி தன் குடும்பத்தாருடன் உல்லாசப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். சிலநாட்களுக்குப் பின் உல்லாசப் பயணத்தை முடித்துவிட்டு ஊர் திரும்பியபோது அவருக்கு அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. பெருவெள்ளம் ஏற்பட்டு தனது வீடு மற்றும் செல்வங்கள் அனைத்தும் அடித்துச் செல்லப் பட்டிருப்பதைக் கண்டார். அவர் பாதுகாத்து வந்த செல்வங்கள் எதையுமே அங்கு காணவில்லை. எல்லாவற்றையும் வெள்ளம் அடித்துச் சென்று தரைமட்டமாக்கி விட்டிருப்பதைக் கண்டு தலையில் கை வைத்து அழுது புலம்பினார். அப்போது அன்று ஒருநாள் வீட்டுக்கு வந்த ஏழை கூறிய அந்த வார்த்தைகள் அவருக்கு நினைவுக்கு வந்தது. தானும் அந்த ஏழையின் நிலைக்கு வந்துவிட்டதையும் அந்த ஏழையின் வாக்குப் பலித்துவிட்டதையும் நினைத்து வருந்தினார். இனிவரும் காலத்திலாவது பிறர் மனம் வருந்தாமல் ஏழைகளுக்கு இயன்றவரை நன்மை செய்து வாழ்வது என்று தீர்மானித்துக்கொண்டார்.

எம்.எஸ்.எப்.பெரோஸா, தரம் - 9, குளி/இஹலகினியம மு.ம.வித்., வீரப்பொகுண.

எனது பாடசாலை

இந்து சமுத்திரத்தின் 'நித்திலம்' என அழைக்கப்படும் இலங்கைத்தீவின் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உள்ள உடத்தலவின்ன கிராமத்திலேயே எனது பாடசாலை அமைந்துள்ளது. ஆயிரம் காலத்துப் பயிராம் கல்வி எனும் அறிவை வழங்கும் எனது பாடசாலையான க/ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி ஒரு சிறந்த கல்லூரியாகத் திகழ்கின்றது. தரம் 1 தொடக்கம் 12 வரையிலான வகுப்புக்களை உள்ளடக்கிய எனது பாடசாலை யில் தரம்-5 இல் நான் கல்வி பயில்கிறேன். எனது பாடசாலை அறிஞர்களையும் அன்பான பல ஆசான்களையும் ஈராயிரம் மாணவர்களையும் கொண்டது. எமது பாடசாலையின் உயர்வுக்காக பொறுமையுடன் மாணவர்களையும் ஆசான்களை யும் வழிநடத்தி பாடசாலையை முன்னேற்றத் துடிக்கும் அன்பான ஆசான் நிலாப்தீன் அவர்கள் எனது பாடசாலையின் அதிபர் ஆவார். எனது பாடசாலையில் ஒரு தொழுகை அறையும் கணினி அறிவைக் கற்க பல கணினிகளும் விஞ்ஞான ஆய்வுகூடமும் நூலகம் ஒன்றும், ஒய்வு நேரத்தைக் கழித்து மகிழ ஒரு மைதானமும் உண்டு. எனது பாடசாலையில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் பலர். இப்பாடசாலை யில் கல்வி பயிலும் நானும் என்றோ ஒருநாள் எனது பாடசாலையிலிருந்து ஒரு கல்விமானாக வெளிவர வேண்டும் என்பதே. எனது ஆசை.

ஐ.எஃப்.இன்ஷாமமுல் பரீட்,
தரம் - 5[B], க/ஜாமியுல் அஸ்ஹர் ம.கல்., உடத்தலவின்ன.

ஓர் இளைஞனின் வைராக்கியம்

அமெரிக் காவில் ஒரு சாலை ஓரமாக மின்கம் பம் நடும் வேலைகளில் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருந் தனர். பல நாட்களாக வேலை செய்து வந்த அவர்கள் ஒருநாள் காலை வேளையில் வெகுநேரமாகி யும் வேலையை ஆரம்பிக்காது யாரையோ எதிர் பார்த்துக் கொண்டி ருந்தனர். அப்போது அவ்வழியாக வந்த உயரமான, மெலிந்த உடலையு டைய ஓர் இளைஞன் அதனை அவதானித்துக்கொண்டே பக்கத்திலுள்ள நகரத்திற்குச் சென்றுகொண் டிருந்தான். பல மணித்தியாலங் களுக்குப் பின்னர் மீண்டும் அவ்வழியே திரும்பி வந்த அந்த இளைஞன் தொழிலாளர்கள் அப்போதும் வேலையில் ஈடுபடாததைக் கண்டு அங்குள்ள மேற்பார்வையாளரிடம் ''நீங்கள் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறீர்கள்? மின்கம்பங்களை இன்னுமா நடவில்லை?'' எனக் கேட்டான். அதற்கு மேற்பார்வையாளர், ''இந்த மின்கம்பங் களைத் தூக்குவதற்கு வரவேண்டிய தொழிலாளர்களில் ஒருவர் இன்னும் வர வில்லை. அவரைத்தான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்'' என்றார்.

அதைக்கேட்ட அந்த இளைஞன், ''நான் அவருக்குப் பதிலாக உதவுகிறேன். வாருங்கள்'' என்று கூறியதும் அனைவரும் சோந்து மின்கம்பங்களைத் தூக்கி சிறிது நேரத்தில் நாட்டி முடித்தார்கள். பின்னர் மேற்பார்வையாளர் அந்த இளைஞனைப் பார்த்து, ''மிக்க நன்றி. உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டார். ''என் பெயர் லிங்கன்'' எனப் பதில் அளித்ததோடு, ''இந்த சிறிய வேலையை நீங்களே செய்தி ருக்கலாமே. இதனால், எவ்வளவு வேலை நேரம் வீண் விரயமாகியது என்பது உங்க ளுக்குத் தெரியுமா?'' என்றதும் மேற்பார் வையாளரின் தலை தாழ்ந்து போனது. ஆனால், ஆப்ரஹாம் லிங்கனோ பிற்காலத் தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாகவே உயர்ந்தார்.

என்.மொஹமட் லாபீர், பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் அதன் முக்கியத்துவமும்

கல்வி முகாமைத்துவம்
கற்றலுக்கான ஆலோசனைகள்

கல்வி எனும் அச்சை மையமாகக்கொண்டே உலகம் சுழன்று வருகின்றது. இந்த அடிப்படையில் கல்வியே முதன்மையானதாக காணப்படுகிறது.

கல்வியின் வகைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. Formal Education: இது பாடசாலையில் வழங்கப்படும் கல்வியாகும். இங்கு ஏற்கனவே பாடத்திட்டம், கற்பித்தல் முறை, ஆசிரியர்கள் என்பவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. திட்டமிட்டு கல்வி போதிக்கப்படுகின்றது.

2. Informal Education: இது முன் திட்டமிடப்பட்டதன்று. கட்டுப்பாடுகள் அற்றது. பிள்ளைகள் பால் குடிக்கும் பருவத்திலிருந்து இறுதி வரை கற்றுக் கொண்டேயிருக்கின்றனர். ஏற்கனவே திட்டமிட்டபடியான பாடத்திட்டம் கிடையாது.

3. Non-Formal Education : கல்விச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை இன்றைய காலகட்டத்தில் தேவையான கல்வியை முற்று முழுதாகப் பெற்றுக் கொள்வதென்பது கடினமான காரியமாகும். இது நெகிழும் தன்மையுடையது. கட்டுப்பாடு அற்றது. Formal and Informal என்ற இரண்டும் கலந்த முறையாகும். இம்முறை மூலம் விசேடமாகக் கல்வியைத் தொடரமுடியும்.

Types of Education & Agencies

Formal	Non-Formal	Informal
School	Correspondence Courses	Family
Religious Places	Radio	Community
Museums	Television	Play group
Library		Friends
Galleries		Religion
Adult Literary		

"மனிதனை மனிதனாக்குவது கல்வி" என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். ஒரு மனிதனுக்கும் ஏனையவற்றுக்கும் இடையிலான வித்தியாசம் கல்வியாகும். இலங்கையின் கல்வி வரலாற்றை நோக்கும்போது; 1942 இல் ஏற்படுத்தப்பட்ட கல்வி விசாரணைச் சபையின் அறிக்கையில் பின்வரும் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன :

i. பொது நோக்கம்
ii. சிறப்பான நோக்கம்

பொது நோக்கத்தைப் பொறுத்தவரை கல்வியென்பது மனிதனை

இம்மை, மறுமை வாழ்க்கைக்குத் தயார் செய்தலாகும். சிறப்பான நோக்கங்களாக மனோவிருத்தி, பண்பாட்டு விருத்தி, திறமை விருத்தி போன்றன காணப்படுகின்றன. ஆகவே, கல்வியைக் கற்றுக் கொள்ளும் மனிதன் இந்த நோக்கங்களை அடையவேண்டும்.

"எமது வாழ்நாள் குறுகியது. அதில் நாம் பல விடயங்களுக்காக கல்வி அறிவைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, தேவையற்ற விடயங்களைக் கற்பதில் வாழ்நாளை வீணடிக்காது மிக உபயோகமான விடயங்களைக் கற்பதில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். எமக்கும் மற்றவர்களுக்கும் மிக உயர்ந்த நன்மைகளைத் தரக்கூடிய அறிவைத் தேடவேண்டும். எம்மைப் பூரண வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதுதான் கல்வியின் பிரதான நோக்கம்"

என்று கல்விச் சிந்தனையாளரான ஹேபேட்ஸ் பென்சர் என்பவர் கூறுகின்றார். மேலும், "நோக்கமில்லாத கல்வி உபயோமற்றது மட்டுமல்ல; ஆபத்தானதும்கூட" என்று ஒவிட்எட் என்பவர் கூறியுள்ளார்.

ஒரு மனிதன் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தைப் புரிந்து வாழ்வாங்கு வாழ்வதற்கும் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக உயர்வடைவதற்கும் கல்வியே துணை புரிகின்றது. பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் உள்ள நாட்டைவிட, கல்வியினால் சிறந்து விளங்கும் நாடே பெறுமதியுடையதாகும். இதன் அடிப்படையில் பொருளாதாரத்திற்கு முன்னர் கல்விக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே, இவ்வாறான முக்கியத்துவத்தையும் சிறப்பியல்புகளையும் உடைய கல்வியானது ஒவ்வொரு மனிதனுக்கும் மிக அவசியமாகின்றது.

(தொடரும்....)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா

துஷாரா கலைவட்டம் - 2010
எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்த பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

போட்டி விதிமுறைகள்

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்தவொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரோயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

போட்டிப் பிரிவுகள்

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், போட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

பரிசுத் தெரிவுகள் (அகில இலங்கை)		
முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர்	ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை)	கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்
இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர்	தெரிவிற்கு ஒருவர் வீதமாக	கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ்
மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர்	பிரிவுக்கு ஒருவர் வீதமாக	கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ்
Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள்	ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம்	கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்
Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15	ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக	கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்
Acron விசேட வெற்றியாளர்கள் 150	ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக	தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ்
Acron சான்றிதழ் பெறுவோர் 400	ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக	விருது, சான்றிதழ்
நிறமைச்சான்றிதழ் 2000	ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக	விருது, சான்றிதழ்

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் வகுப்புவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.

முகவரி: துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்கஷால் வீதி, கொழும்பு-11.

தொடர்புகளுக்கு - 011 4962520, 0714483704.

THUSHARA KALA KAVAY A

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron All Island Art Competition

விண்ணப்பப்படிவம் Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex :
ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

போட்டியாளரின் கையொப்பம் திகதி பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்
Applicant's Signature Date Parents/Guardians Signature

பிரதான அனுசரணை: Acron COLSTAR ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனாகலையைச் சேர்ந்த அரசரட்ணம்-சத்தியபிரியா தம்பதியரின் செல்வப் புதல்வன் சந்துரு, 26.04.2010 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: கே.கலையரசு)

விஜய் 'விரா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

கழுகமுவ, கெலிஓயாவைச் சேர்ந்த நவ்பர்-அஸ்மியா தம்பதியரின் அருமைப் புதல்வன் பிர்நாஸ் அஃமட், 13.05.2010 அன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

வியாங்கல்லையைச் சேர்ந்த பயாஸ்-ஜெஸ்ரினா தம்பதியரின் செல்வப் புதல்வன் அப்துர் ரஷீத், இன்று (12.05.2010) தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரைப் பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பஸ்வியா)

கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு

பி.தினேஷ்,
தரம் - 8, யூனியன் கல்.,
தெல்லிப்பளை.

எம்.ஒலித், தரம் - 8[B],
சிறாஜ் மு.ம.வித்.,
திருகோணமலை.

எம்.என்.நலிஃப், தரம் - 3,
புனித சவேரியர் கல்.,
நுவரெலியா.



எஃப்.சுஹைறா,
தரம் - 10,
அல்-முனீறா பா.க.ம.வித்.,
மட்டக்களப்பு.

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியின் சில நிகழ்வுகளையே படங்களில் காண்கிறீர்கள்.

மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

பூக்கூடை

மைதிலி மதுஷா, தரம் - 8[B],
விபுலானந்தா த.ம.வித்.,
கொழும்பு.

எஃப்.றக்சானா, தரம் - 6[A],
பதுரியா வித்., காத்தான்குடி.

எஃப்.ஃபஹீமா, தரம் - 8[D],
ஃபாத்திமா மு.பெ.கல்., புத்தளம்.

மர மரம்

மர்ஷாட், தரம் - 6[A],
ஸாஹிரா கல்., கொழும்பு.

தபால்காரன்

இ.ஜவாநீசன்,
தரம் - 11[C], யாழ்.இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.

ஏ.ஜி.அமீரா,
தரம் - 9, அரபா மு.ம.வித்.,
காலி.

மரம்

நிரஞ்சன், தரம் - 5[A],
புனித அந்தோனியார் கல்.,
நுவரெலியா.

எஃப்.ஷம்ஹா,
தரம் - 2, ஸாஹிரா கல்.,
திருகோணமலை.

வெசக்

ஹபீபா காதர், தரம் - 9,
அல்-பாஸியதுல் நஸ்ரியா
மு.பெ.ம.வித்.,
பேருவளை.

எஸ்.சப்ராஸ், தரம் - 11[A],
அல்-பஹ்ரியா ம.கல்.,
பாணந்துறை.

வானவில்

ச.சிந்துஜா, தரம் - 3[B],
விபுலானந்தா த.ம.வித்.,
கொழும்பு.

நவீட் ஷகி, தரம் - 4,
ஒக்ஸ்ஃபோர்ட் சர்வதேச பாட.,
பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனற்ற திறமை

கனி என்ற செல்வந்தர் ஒருமுறை ஒரு தொலை தூர நகரத்துக்கு குதிரைப் பயணம் மேற்கொண் டார். குதிரையில் அவர் செல்கையில், வழியில் வறுமைக் கோலத்தில் ஒரு மனிதன் நடந்து செல்வதைக் கண்டார். கனி அந்த மனிதனைத் தாண்டிச் சென்றபோது, இருவரும் அந்நாட்டு வழக்கப்படி வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்ட னர். அப்போது அந்த மனிதன், கோணிப்பைகளில் என்ன இருக்கின்றன? என்று கேட்டான்.

"ஒரு மூடையில் கோதுமையும் மற்றொரு மூடை யில் மணலும் இருக்கின்றன. கோதுமையின் எடை யைச் சமப்படுத்துவதற்காக மற்ற மூடையில் மணலை வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் குதிரை ஒருபுறமா கச் சாய்ந்துவிடுமே?" என்றார் கனி.

"அப்படியா? ஆனால், எடையைச் சமமாகப் பிரிப்ப தற்கு இன்னும் ஒரு நல்ல வழியை என்னால் கூறமுடியும்" என்ற அந்த மனிதன், "மணல் மூடை யிலிருந்து மணலைக் கொட்டிவிட்டு அதில் பாதியளவுக்குக் கோதுமையை நிரப்புங்கள். மற்ற மூடையில் பாதியளவு கோதுமை இருக்கட்டும். இதன் மூலம், குதிரை சுமக்கும் எடை கணிசமாகக் குறையும்" என்றார்.

அவன் அதைக் கூறியதும் ஆச்சரியமடைந்தார் கனி. "அடடே!" என வியந்தார். "இந்த எளிமையான நல்ல யோசனை எனக்குத் தோன்றாமல் போய்விட்டதே! நீங்கள் கூறியபடியே செய்கிறேன்" என்று கோதுமையை இரு மூடைகளுக்கும் பாதிபாதியாக மாற்றினார் கனி.

பின்னர் அந்த மனிதனை நோக்கி, "நீங்கள் ஏன் எனது தொழிலில் பங்குதாரர் ஆகக்கூடாது? உங்களின் புத்திசாலித்தன மும் எனது பணமும் சேர்ந்தால் நாம் உலகத்தையே வென்று விடலாம்" என்றார்.

அந்தப் புதியவன் கனியின் வேண்டுகோளுக்கு ஒப்புக்கொண் டான். நடந்து நடந்து அவன் களைத்துப் போயிருப்பதைக் கண்ட கனி, அவனையும் குதிரையில் ஏறிக்கொள்ளும்படி கூறினார். சிறிது நேரம் கழிந்த நிலையில் கனி அந்தப் புதியவனிடம், "உங்களின் புத்திசாலித்தனத்தைப் பார்க்கையில் நீங்கள் நல்ல வசதியானவராகத் தான் இருக்கவேண்டும். உங்களுக்கு எத்தனை குதிரைகள் இருக்கின்றன?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை.." என்ற அவன் தொடர்ந்து, "எனது தோற்றத்தை பார்த்தால் வசதியானவன் போலவா தெரிகிறது?" என்று கேட்டான்.

"நீங்கள் உங்களின் வசதியை மறைக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்ற கனி, "உங்களுக்கு எத்தனை வீடுகள் இருக்கின்றன?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"ஒன்றுமில்லை" என்றான் அவன்.

"எனக்குத் திறமை இருந்தபோதும் அதைப் பயன்படுத்திச் செல்வம் எதுவும் சேர்க்கவில்லை. சொல்லப்போனால் இன்றிரவு சாப்பாட்டுக்குக் கூட வழியில்லை" என்றான் அந்த மனிதன். இதைக்கேட்டு வியந்து போனார் கனி.

"அப்படியானால் நீங்கள் உடனேயே எனது குதிரையிலிருந்து இறங் கிப் போய்விடுங்கள்!" என்றார் கனி கண்டிப்போடு.

"புத்திசாலித்தனம் இருந்தும் அதைப் பயன்படுத்தி முன்னேறாதவனை சுமந்து செல்வதைவிட, ஒரு மூடையில் கோதுமையையும் மற்றொரு மூடையில் மணலையும் சுமந்து செல்வது மேல்" என்றார் கனி.

அரசர் கூறியதைக் கேட்டு, வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் மனவேதனையோடு தலையைத் தாழ்த்தியவாறு அங்கிருந்து சென்றான். தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரைக்குச் சேணம் பூட்டத் தொடங்கியபோது அது அவனிடம் கேட்டது: "ஏன் இவ்வளவு துயரமாக இருக்கிறாய் எஜமானனே, ஏதேனும் தகாதது நடந்துவிட்டதா?"

"தானே வாசிக்கும் இசைக்கருவி, நடனமாடும் வாத்து, பாடும் பூனை இவற்றைப் பிடித்துத் தன்னிடம் கொண்டு வரும்படி அரசர் கட்டளையிடும்போது, எப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியும்? அவற்றை நான் கேள்விப்பட்டதுகூட இல்லை" என்றான் கவலையுடன்.

"கவலைப்பட எதுவுமில்லை. என் மீது ஏறிக்கொள். சூனியக்காரக் கிழவி பாபா-யகாவிடம் சென்று அந்த அதிசயங்களை எங்கே கண்டுபிடிப்பது என்று கேட்போம்" என்றது தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரை.

இதனால், வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் பயணத்திற்குத் தயாரானான். அவன் குதிரை மீது ஏறியதைத்தான் அங்குள்ளோர் பார்த்தனர். ஆனால், அவன் வெளிவாயிலைக் கடந்து சென்றதை யாரும் பார்க்கவில்லை. அவ்வளவு வேகமாக அக்குதிரை அங்கிருந்து புறப்பட்டது.

அவன் நீண்ட தூரம் பயணித்த பின்னர் இறுதியில் அடர்ந்த ஒரு காட்டை வந்தடைந்தான். அங்கே ஒரே இருட்டாக இருந்தது. எவ்வித ஒளியுமில்லை. தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண்குதிரை நீண்ட தூரம் பயணித்ததால் மிகவும் களைத்துப் போனது. வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் மிகவும் சோர்ந்து போனான். எனினும், அவன் தொடர்ந்து பயணித்துக் காட்டில் உள்ள ஒரு வெட்ட வெளியை அடைந்தான். அங்கு கோழிக் காலில் நின்ற ஒரு குடிசையைக் கண்டான். அது கிழக்கிலிருந்து மேற்காகத் திரும்பித் திரும்பிச் சுற்றியது. வயதில் இளைய அறிவில் மூத்த இவான் அந்த வீட்டிற்கு அருகே சென்று கூறினான்.

"சின்னஞ்சிறு குடிலே, சின்னஞ்சிறு குடிலே, தயவுசெய்து உனது பின்புறத்தை மரங்களுக்கும் முகப்பை எனக்கும் காட்டு. ஆண்டுக்கணக்காக நான் இங்கு தங்கமாட்டேன். விடியும்வரையே இங்கு நான் தங்கவேண்டும்"

குடிசை தனது முகப்பை அவன் பக்கம் திருப்பியது. தனது குதிரையைக் கம்பு ஒன்றில் பிணைத்துவிட்டு கதவை அகலத் திறந்தான் இவான். அங்கே, கூரையைத் தொடுகிற நீளமான மூக்கும் விகாரமான தோற்றமும் கொண்ட சூனியக்காரி பாபா-யகா தனது உரலையும் உலக்கையையும் அருகே வைத்தவாறு அமர்ந்திருந்தாள். தனது விருந்தாளியைப் பார்த்த பாபா-யகா கொக்கரித்தாள்:

"ஆகா, மாமிச வாடை அடிக்கிறதே! இங்கே எதற்காக வந்திருக்கிறாய் இளைஞனே?"

"இப்படித்தான் விருந்தாளியை நீ நடத்துவாயா பாட்டி? பசியாலும் குளிராலும் வாடுபவருடன் பேசித் தொல்லைப்படுத்தாதே! விருந்தாளிக்கு முதலில் உண்ணவும் பருகவும் தந்து உபசரித்து, ஓய்வெடுக்கவும் குளிக்கவும் வசதி செய்து, பின்னர்தான் கேள்வி கேட்கத் தொடங்குவார்கள். இது உனக்குத் தெரியாதா பாட்டி?"

பாபா-யகா வெட்கம் அடைந்தாள். "இந்தக் கிழவியிடம் கோபப்படாதே இளைஞனே. உனக்கு இப்போது செய்ய வேண்டியதையெல்லாம் செய்கிறேன்" என்று கூறினாள்.

உண்ணவும் பருகவும் கொடுத்து விருந்தாளியை உபசரித்தாள். பின்னர் குளியல் அறையில் உள்ள சூட்டடுப்புக்கு நெருப்பு மூட்டி சுடுநீர் தயாரித்தாள். வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் அதில் குளித்தான். பின்னர் பாபா-யகா அவனுக்குப் படுக்கையை விரித்து ஓய்வெடுத்துக் கொள்ளச் சொன்னாள். பின்னர் அவனது படுக்கை அருகே அமர்ந்து கேள்விகளைக் கேட்டாள்;

'நீயாக விரும்பி இங்கு வந்திருக்கிறாயா. அல்லது வேறு யாராவது உன்னைக் கட்டாயப்படுத்தி அனுப்பினார்களா? நீ இப்போது எங்கே போகிறாய் சொல் இளைஞனே"

"தானே வாசிக்கும் இசைக்கருவி, நடனமாடும் வாத்து, பாடும் பூனை இவற்றைப் பெற்று வருமாறு அரசர் என்னை அனுப்பியிருக்கிறார்.

சூனியக்காரக் கிழவி செய்த உதவி

அவற்றை எங்கே கண்டுபிடிப்பது என்பதை மட்டும் நீ சொன்னால் மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன் பாட்டி" என்று இவான் பதிலளித்தான்.

"அவை எங்கே இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும் இளைஞனே. ஆனால், அவற்றை நீ அடைவது சிரமம். அவற்றைத் தேடிப் பல இளைஞர்கள் சென்றார்கள். ஆனால், ஒருவன் கூடத் திரும்பி வரவில்லை என்பதை உனக்குச் சொல்லி உதவ விரும்புகிறேன்"

நீண்ட நேரம் சிந்தித்த பாபா-யகா "சரி, இளைஞனே உனக்காக நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால், உனக்கு உதவுவதைத் தவிர, வேறு வழியில்லை. தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரையை இங்கே விட்டுச் செல். அது என்னிடம் பத்திரமாக இருக்கும். இந்த நூற்கண்டை உன்னுடன் எடுத்துச் செல். நாளை நீ புறப்படும்போது, தரையில் இதைப் போட்டுவிட்டு, அது எங்கெல்லாம் உருள்கிறதோ அங்கெல்லாம் அதைப் பின்பற்றிச் செல். அது என் நடுச்சகோதரியிடம் கொண்டு போய்ச் சேர்க்கும். அவளிடம் நூற்கண்டைக் காட்டு, அவள் தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் உனக்குச் செய்வாள். அவளுக்குத் தெரிந்தவற்றை உனக்குக் கூறுவாள். அதன்பின்னர் அவள் எனது மூத்த சகோதரியிடம் உன்னை அனுப்பி வைப்பாள்"

மறுநாள் பொழுது புலரும் முன்னே தனது விருந்தினனை பாபா-யகா எழுப்பி, உண்ணவும் பருகவும் கொடுத்து, வாசலுக்கு வந்து வழியனுப்பி வைத்தாள். வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் அவளுக்கு நன்றி கூறி, விடை பெற்றுக்கொண்டு தனது பயணத்தைத் தொடர்ந்தான். அவனின் முன் நூற்கண்டு உருண்டு கொண்டே இருந்தது. இவானும் அதைப் பின்தொடர்ந்து சென்றான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ආයුබෝවන් ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் சுமலுக்கும் சுனிலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

සුනිල්: කොහොමද කමල් ඒ මයෙ හොඳද?
கொஹொமத கமல் ஏ கெய ஹொந்தத?
சுனில்: எப்படி கமல் அந்த வீடு நல்லதா?

කමල්: හොඳයි සුනිල්. මටයි අම්මටයි ඇති.
ஹொந்தய் சுனில். மடய் அம்மடய் எதி.
கமல்: நல்லது சுனில். எனக்கும் அம்மாவுக்கும் போதுமானது.

සුනිල්: හෙවල් අයිතිකාරයා හරි හොඳයි. ඔයාලට කරදරයක් වෙන්නෙ නැහැ.
கெவல் அயிதிகாரயா ஹரி ஹொந்தய். ஒயாலட கரதரயக் வென்னே நெஹெ.
சுனில்: வீட்டு சொந்தக்காரர் மிகவும் நல்லவர். உங்களுக்கு ஒரு தொந்தரவும் இருக்காது.

කමල්: මම දවසක් කලින් එන්නම්. මයෙ සෝදලා පිරිසිදු කරගන්න ඕනේනේ.
மம தவசக் கலின் என்னம். கெய சோதலா பிரிசிது கறகன்ன ஓனேனே.
கமல்: நான் ஒரு நாளைக்கு முன்பு வருகிறேன். வீட்டைக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்தானே.

සුනිල්: ඔව් කමල් ඔයා එනදාට කලින් මට දන්වන්න. දැන් ඔයා අදම ගෙදර යනවාද?
ஒவ் கமல் ஒயா எனதாட கலின் மட தன்வன்ன. தென் ஒயா அதம கெதர யனவாத?
சுனில்: ஆம் கமல் நீங்கள் வருகின்ற நாளுக்கு முன்பு எனக்கு அறிவியுங்கள். இன்றைக்கே வீட்டுக்குப் போகிறீர்களா?

කමල්: ඔව් සුනිල් යන්න ඕනේ. වැඩ ගොඩක් කරගන්න තියෙනවා. තව සතියනේ තියෙන්නේ.
ஒவ் சுனில் யன்ன ஓனே. வெட கொடாக் கரகன்ன தியெனவா. தவ சதியனே தியென்னே.
கமல்: ஆம் சுனில் போகவேண்டும். செய்து முடிக்க நிறைய வேலைகள் இருக்கின்றன. இன்னும் ஒரு வாரம்தானே இருக்கிறது.

සුනිල්: හොඳයි කමල් එහෙනම් ගිහින් එන්න.
ஹொந்தய் கமல் எஹெனம் கிஹின் என்ன.
சுனில்: நல்லது கமல் அப்படியென்றால் போய் வாருங்கள்.

කමල්: ඔයා කළ උදව්වට බොහෝම ස්තුතියි.
ஒயா கள உதவ்வட பொஹோம ஸ்துதிய்.
கமல்: நீங்கள் செய்த உதவிக்கு மிக்க நன்றி.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.

உதாரணம்: அம்மாவுக்கும் எனக்கும் போதுமானது.
අම්මටයි මටයි ඇති.

i. இன்று வீட்டுக்குப் போகவேண்டும்.
.....

ii. வீடு கழுவ வேண்டும்.
.....

iii. நீங்கள் செய்த உதவிக்கு நன்றி.
.....

'Will' சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப் பட்ட எதிர்கால வாக்கியங்களையும் 'going to' சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட எதிர்கால வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம் .

Future Tense will+stem Verb

(அ) He will watch.
அவன் அவதானிப்பான்.

(இ) She will study.
அவள் படிப்பாள்.

(உ) It will jump.
அது பாயும்.

Future Tense going to+stem Verb

(ஆ) He is going to watch.
அவன் அவதானிக்கப் போகின்றான்.

(ஈ) She is going to study.
அவள் படிக்கப் போகின்றாள்.

(ஊ) It is going to jump.
அது பாயப் போகின்றது.

(அ) He will watch the television.
அவன் தொலைக்காட்சியை அவதானிப்பான்.

(ஆ) He is going to watch the television.
அவன் தொலைக்காட்சியை அவதானிக்கப் போகின்றான்.

(இ) She will study English.
அவள் ஆங்கிலம் படிப்பாள்.

(ஈ) She is going to study English.
அவள் ஆங்கிலம் படிக்கப் போகின்றாள்.

(உ) It will jump into the well.
அது கிணற்றுக்குள் பாயும்.

(ஊ) It is going to jump into the well.
அது கிணற்றுக்குள் பாயப் போகின்றது.

Future Tense will+stem Verb

(அ) You will start.
நீ ஆரம்பிப்பாய்.

(இ) We will drink.
நாங்கள் குடிப்போம்.

(உ) They will swim.
அவர்கள் நீந்துவார்கள்.

Future Tense going to+stem Verb

(ஆ) You are going to start.
நீ ஆரம்பிக்கப் போகின்றாய்.

(ஈ) We are going to drink.
நாங்கள் குடிக்கப் போகின்றோம்.

(ஊ) They are going to swim.
அவர்கள் நீந்தப் போகின்றார்கள்.

(அ) You will start your work tomorrow.
நீ உனது வேலையை நாளை ஆரம்பிப்பாய்.

(ஆ) You are going to start your work tomorrow.
நீ உனது வேலையை நாளை ஆரம்பிக்கப் போகின்றாய்.

(இ) We will drink coffee tonight.
நாங்கள் இன்றிரவு கோப்பி குடிப்போம்.

(ஈ) We are going to drink coffee tonight.
நாங்கள் இன்றிரவு கோப்பி குடிக்கப் போகின்றோம்.

(உ) They will swim in the river.
அவர்கள் ஆற்றில் நீந்துவார்கள்.

(ஊ) They are going to swim in the river..
அவர்கள் ஆற்றில் நீந்தப் போகின்றார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல நிறுவனங்களின் ஆரம்பமும் அமைவிடமும்

கீழ் காணப்படும் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட வருடமும் அவை அமைந்திருக்கும் நாடும் நகரமும் வருமாறு;

* உலக வங்கி - IBRD
  1945 - அமெரிக்கா, வொஷிங்டன்
* ஆசிய அபிவிருத்தி வங்கி - ADB
  1966 - பிலிப்பைன்ஸ், மெனிலா
* ஒபெக் அமைப்பு - OPEC
  1960 - ஒஸ்ட்ரியா, வியானா
* 'கெட்' அமைப்பு - GATT
  1948 - சுவிட்சர்லாந்து, ஜெனீவா
* சர்வதேச தொழிலாளர் அமைப்பு - ILO
  1919 - சுவிட்சர்லாந்து, ஜெனீவா
* சார்க் அமைப்பு - SAARC
  1985 - நேபாளம், காத்மண்டு
* 'யுனிசெஃப்' - UNICEF
  1946 - அமெரிக்கா, நியூயோர்க்
* உலக சுகாதார ஸ்தாபனம் - WHO
  1946, சுவிட்சர்லாந்து, ஜெனீவா
* சர்வதேச நாணய நிதியம் - IMF
  1946 - அமெரிக்கா, வொஷிங்டன்
* பொதுநலவாய அமைப்பு - The Common Wealth
  1931 - பிரிட்டன், லண்டன்
* யுனெஸ்கோ - UNESCO
  1946 - பிரான்ஸ், பெரிஸ்

தெரிந்து கொள்ளுங்கள்

* இலங்கையிலுள்ள வணிக வங்கிகள்?
  22
* இலங்கையிலுள்ள தேசிய வங்கிகள்?
  11
* இலங்கையிலுள்ள வெளிநாட்டு வங்கிகள்?
  11
* இலங்கையில் விநியோகிக்கப்படுகின்ற கிரெடிட் கார்ட்களில் சராசரியாக 100,000 பேருக்கு எத்தனை பேர் கிரெடிட் கார்ட் பாவனையாளர்களாக உள்ளனர்?
  4,538
* www என்ற சுருக்க எழுத்துக்களின் விரிவாக்கம் என்ன?
  world wide web
* இதனை உருவாக்கியவர்கள் யார்?
  டொக்டர் ரொபர்ட் கயிலியோ மற்றும் சேர் டிம் பேர்னர்ஸ் லீ
  (Dr.Robert Cailiau, Sir Tim Bernors Lee
* ஐ.நா தினம் எப்போது?
  ஒக்டோபர் 24
* ஐ.நாவின் தற்போதைய பொதுச்செயலாளர்?
  பென் கீ மூன்
* ஐ.நா வில் இலங்கை உறுப்புரிமை பெற்றது?
  1955 டிசம்பர் 14

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

எண்ணெய் அகழ்வும் பரண் வெடித்து கடல் மாசடைவு

* மூழ்கிய எண்ணெய் பரண்
* நீளம் - 121 மீற்றர்
* அகலம் - 78 மீற்றர்

* கட்டப்பட்டது: 2001ஆம் ஆண்டு
* நாளொன்றிற்கு 8,000 பேரல் எண்ணெய் அகழப்படுகின்றது.



AFP

பரணில் உலகப் பிரபல்யம் பெற்ற 'B.P' என்ற நிறுவனமே எண்ணெய் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தது. தற்போது ஏற்பட்டுள்ள கசிவினைத் தடுப்பதற்காக இந்த நிறுவனம் தொலைஇயக்கியின் மூலம் (ரிமோட் கொன்ட்ரோல்) இயங்கக்கூடிய ரொபோவை கடலுக்கடியில் இறக்கி, குழாய்களின் கசிவுப் பகுதிகளில் திருத்தங்களை மேற்கொள்ள முயற்சித்து வருகின்றது.

மேற்படி எண்ணெய்யானது கடலில் 1150 கி.மீற்றர் தூரம் வரையில் பரவியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக ஏராளமான டொல்ஃபின், கடல் ஆமைகள் மற்றும் பல மீன் இனங்களும் அழிவை எதிர்நோக்கியிருப் பதும் குறிப்பிடத்தக்கது. ஏற்பட் டுள்ள சூழல் மாசடைதலைத் தடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பணித்துள் ளார். இந்த எண்ணெய் கசிவின்

அமெரிக்காவில் சம்பவம்

அமெரிக்காவிலிருந்து மெக்ஸிக்கோ நோக்கிய கடல் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த 'ஹொரைசன்' என்று பெயரிடப்பட்ட எண்ணெய் 'அகழ்வுப் பரண்' ஒன்று வெடித்து கடலில் மூழ்கியுள்ளது. இதனால், பெருமளவு மசகு எண்ணெய் கடலில் கலந்து சூழல் மாசடைதலை தோற்றுவித்துள்ளதுடன், அதனைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக பாரியளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி எண்ணெய் அகழ்வுப் பரண் வெடித்தமையால் எண்ணெய் அகழ்வுடன் சம்பந்தப்பட்டிருந்த குழாய்களில் கசிவு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே கடல் நீரில் எண்ணெய் கலந்துள்ளது.

அமெரிக்காவிற்குச் சொந்தமான இந்த எண்ணெய் அகழ்வுப் மூலமாக 5,000 கெலன் அளவிலான எண்ணெய் கடல் நீரில் நாளாந்தம் கலப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வெடிப்புச் சம்பவத்தின்போது அங்கு கடமையில் இருந்த 126 பேரில் பதினொரு பேர் காணாமல் போயுள்ளனர். மிகுதி 115 பேர் காப்பாற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அற்லஸ் கேள்வி - 255

கேள்வி: அமெரிக்காவில் வெடித்துக் கடலில் மூழ்கிய எண்ணெய் பரணின் பெயர் என்ன?

சரியான விடை.....

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 255,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 253 இன் சரியான விடை: ஐஸ்லாந்து

பரிசு பெறுவோர்

பாத்திமா றிபாஸா,
16/40, விஜயராம குறுக்குவீதி, பலப்பிட்டி.

சூரியமூர்த்தி விமலேசன்,
129, தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.

எம்.ப்.அஸ்மா,
17/C, டெம்பிள் றோட், களுபோவில, தெஹிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் வங்கிவரை ஐ.பி.எல் ஊழல்

இந்தியாவில் நடந்து முடிந்த ஐ.பி.எல் போட்டிகளில் ஏராளமான மோசடிகள் நடைபெற்றுள்ளதாக தொடர்ச்சியாக செய்திகள் வெளிவருகின்றன.

இவ்வாறு நடைபெற்ற மோசடியில் பெறப்பட்ட பெருமளவு பணம் சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அணியின் ஏலம், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமம் வழங்கல் போன்றவற்றிலும் ஊழல்கள் நடைபெற்றுள்ளதாம்.

இந்திய வருமான வரி அதிகாரிகள் இவை குறித்தான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். ஐ.பி.எல் போட்டிகள் தொடர்பான மோசடியில் இந்திய நாணயப் பெறுமதியில் கிட்டத்தட்ட 20 கோடி ரூபா சுவிஸ் வங்கியில் வைப்பில் இடப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

20/20 போட்டியிலிருந்து முரளி நாடு திரும்பினார்

38 வயதாகின்ற முரளிதரன் இதுவரை 792 டெஸ்ட் விக்கெட்களையும் 512 ஒருநாள் விக்கெட்களையும் பெற்றுள்ளார். அவ்வாறே, 10 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் கலந்துகொண்டு 13 விக்கெட்களைப் பெற்றுள்ளார்.

2007 ஆம் ஆண்டிலும் இங்கிலாந்தில் நடைபெற்ற பிராந்திய அணிப் போட்டியொன்றில் உபாதைக்கு ஆளாகியமையால் அந்த வருடத்தில் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற முதலாவது 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் முரளிதரன் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கு முரளிதரனின் இறைமைமிகு பங்களிப்பு காரணமாக அமைந்தது. உபாதைக்கு உள்ளாகியிருக்கின்ற முரளிதரன் மூன்று வாரங்களுக்கு ஓய்வெடுக்கவேண்டும் என்று மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் கலந்து கொள்ளச்சென்றிருந்த முத்தையா முரளிதரன் போட்டியின் இடைநடுவே நாடு திரும்பியுள்ளார். அவரது கையில் ஏற்பட்ட உபாதையின் காரணமாகவே அவர் நாடு திரும்பியுள்ளார். இதன் காரணமாக மீதமாக உள்ள 'டுவென்டி டுவென்டி' போட்டிகளிலும் அவர் கலந்து கொள்ளமாட்டார்.

நியூஸிலாந்திற்கு எதிரான முதலாவது போட்டியில் கலந்து கொண்டபோதே முரளிதரன் கையில் உபாதைக்கு உள்ளாகினார்.

மேற்கிந்திய தீவுகளில் 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளச்சென்றுள்ள இந்திய அணியினருக்கு அந்நாட்டின் கிரிக்கெட் சபை சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அதன்படி, இரவு வேளைகளில் விருந்து, களியாட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இரவில் விரைவாக உறக்கத்திற்குச் செல்வதுடன், காலையில் நேரகாலத்துடன் விழிக்கவேண்டும். பயிற்சிக்கு உரிய நேரத்திற்கு தாமதமின்றிச் செல்லவேண்டும், முன்பின் தெரியாதவர்களிடம் அன்பளிப்புக்களைப் பெறக்கூடாது போன்ற

இந்திய வீரர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள்

கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவைகுறித்த, விபரமான அறிக்கையொன்று அணியின் தலைவர் டோனியிடம் அனைவரது கவனத்திற்கும் கொண்டுவரும்படி வழங்கப்பட்டுள்ளது. இவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு அணியின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

'ஐ.பி.எல்' சிறப்பு விருதுகள்

DLF INDIAN PREMIER LEAGUE

சிறந்த மைதானம், வர்ணனையாளர் விருதுகளும் வழங்கப்பட்டன

இம்முறை முதல் தடவையாக ஐ.பி.எல் போட்டிகள் தொடர்பாக ஏராளமான சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வருடம் (2010) மற்றும் 2009 ஆம், 2008 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளைக் கருத்தில் கொண்டே இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறந்து வீரர்களுக்கு மட்டுமன்றி, சிறந்த மைதானம், சிறந்த வர்ணனையாளர்கள் ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, சிறப்பு நடுவர் குழுவொன்றினால் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் வருமாறு:

* சிறந்த புதுமுக வீரர் - தைரன் பொலாட் (மும்பாய் இந்தியன்ஸ்)
* சிறந்த துடுப்பாட்ட வீரர் - சச்சின் டென்டுல்கர் (மும்பாய் இந்தியன்ஸ்)
* சிறந்த பந்து வீச்சாளர் - பிரக்யான் ஓஜா (டெக்கான் சார்ஜர்ஸ்)
* போட்டித்தொடரின் சிறந்த வீரர் - ஹர்பஜன் சிங் (மும்பாய் இந்தியன்ஸ்)
* போட்டித்தொடரில் ஜனரஞ்சகத்தைப் பெற்றவர் - ஜெக் கலிஸ் (ரோயல் செலன்ஜர்ஸ்)

* 2008 இல் ஜனரஞ்சக வீரர் - பிரென்டம் மெக்கலம் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்)
* 2009 இன் ஜனரஞ்சக வீரர் - அணில் கும்ப்ளே (ரோயல் செலன்ஜர்ஸ்)
* சிறந்த பந்துக் காப்பாளர் - பென்ஜமின் பிவிலியர்ஸ் (டில்லி டெயார் டெவில்ஸ்)

* சிறந்த மைதானம் - சின்னசுவாமி அரங்கு (பெங்களூர்)
* சிறந்த பார்வையாளர் அரங்கம் - டீ.ஐ.பட்டேல் அரங்கம் (மும்பாய்)

பார்வையாளர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்:

* சிறந்த 'கெட்ச்' - டேவிட் ஹஸி (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்)
* சிறந்த துடுப்பாட்ட வீரர் - சச்சின் டென்டுல்கர் (மும்பாய் இந்தியன்ஸ்)
* சிறந்த அணித் தலைவர் - சச்சின் டென்டுல்கர் (மும்பாய் இந்தியன்ஸ்)
* சிறந்த பந்து வீச்சாளர் - பிரக்யான் ஓஜா (டெக்கான் சார்ஜர்ஸ்)
* சிறந்த வர்ணனையாளர் - ரவி சாஸ்திரி
* சிறந்த பந்துத் தடுப்பாளர் - சுரேஷ் ரெய்னா (சென்னை சுப்பர் கிங்ஸ்)

வர்ணனையாளர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்

* சமயோசிதமான புத்திசாலிப் பந்துவீச்சாளர் - ரவிச்சந்திரன் அஷ்வின் (சென்னை சுப்பர் கிங்ஸ்)
* வேகமாக சதம் பெற்றவர் - யூசுப் பத்தான் (ராஜஸ்தான் ரோயல்ஸ்)
* அதிக பவுன்டரிகளைப் பெற்றவர் - வீரேந்திர ஷேவாக் (டில்லி டெயார் டெவில்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவில் பல ஆய்வுகள்

விண்வெளித் தகவல்கள்

மனிதன் சந்திரனில் காலடி வைத்து நான்கு தசாப்தங்கள் கடந்த பொழுதிலும் சந்திரனைப் பற்றி போதுமான தகவல்களை இன்னும் பெறவில்லை என்றே கூறவேண்டும். புவிக்கு அயலகமான சந்திரனின் ரகசியங்களை வெளிப்படுத்த விஞ்ஞானிகள் பல தசாப்தங்களாக முயற்சித்து வருகின்றனர். குறிப்பாக சந்திரனில் நீர் உள்ளதா? என்பது பற்றியே அந்த ஆய்வுகள் அமைந்திருந்தன.



அதன் பிரதிபலனை கடந்த வருடம் அடையக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. அதுதான் சந்திரனில் நீர் இருக்கின்றமை ஊர்ஜிதப் படுத்தப்பட்டமை ஆகும்.

இந்த வெற்றியானது விண்வெளி ஆய்வின் மாபெரும் மைல்கல்லென நாஸா அறிவித்துள்ளது. இதனை மையமாகக்கொண்டு படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் ஆரம்பத் தரவுகளின்படி, சந்திரனில் உள்ள ஆழமான குழியினுள் நீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக நாஸா நிறுவனம் தெரிவிக்கின்றது.

"இக்கண்டுபிடிப்பின் மூலம் சந்திரன் குறித்த எமது அறிவில் புதிய அத்தியாயம் திறக்கப்படுகின்றது" என விண்வெளி செயற்றிட்டத்தின் பிரதான விஞ்ஞானி அந்தனி கொலப்ரேட் தெரிவித்தார்.

இந்தியாவின் 'சந்திரயான் 1' ஆய்வு விண்கலம் சேகரித்தனுப்பிய தகவல்களின் அடிப்படையில் சந்திரனில் நீர் அணுக்கள் இருப்பதாக கண்டறியப்பட்டது. அதன் பின்னர், நாஸா நிறுவனம் 'LCROSS' என்ற பெயரில் மேலதிக திட்ட நடவடிக்கைகளைத் தொடர இரு ஆய்வு விண்கலங்களைப் பயன்படுத்தியது. இது குறித்து நாம் 'விஜய்'யில் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றோம்.

பிரவுன் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியரும் 'LCROSS' வேலைத்திட்டத்தின் உதவி ஆய்வாளருமான பீற்றர் ஸ்கூல்ட்ஸ் இது தொடர்பாக தெரிவிக்கையில், "சந்திரனின் மேற்பரப்பில் மேலும் நீர் இருக்கலாம் என ஊகிக்கின்றோம். நாம் முதன்முதலாக அகழ்ந்த இடத்திலேயே நீர் கிடைத்தமை பெரும் வியப்பான விடயம். இது பூமியில் எண்ணெய் அகழ்ந்தெடுப்பு நடவடிக்கை போலத்தான். ஓரிடத்தில் எண்ணெய் கிடைத்தால் அதனைச் சுற்றிப் பல இடங்களில் எண்ணெய் கிடைக்கும் வாய்ப்பு மிக அதிகம் என்பதால், அருகில் உள்ள மேலும் பல இடங்களிலும் அகழ்வுப் பணியை மேற்கொள்வோம்.

அதுபோன்றுதான் சந்திரனின் ஏனைய பகுதிகளிலும் நீர் இருக்குமா? என்பது குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்காக மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்" என ஸ்கூல்ட்ஸ் மேலும் தெரிவிக்கின்றார்.

எனினும், இதற்கு முந்திய விஞ்ஞானிகளின் அனுமானத்தின்படி; சந்திரனின் குழியின் அடியில் உள்ள பனிப்படலம் தவிர முழு சந்திரனும் முழுமையாக வறண்டதொரு இடம் எனக் கூறப்பட்டது. இவ்வாறிருக்க, புவியை ஒத்த தன்மை கொண்டதெனக் கருதப்படும் சந்திரனின் மேற்பரப்பில் நீர் உண்டு என்பதைக் கண்டுபிடித்தமை விண்வெளி ஆய்வில் பிரதான மைல்கல்லாகும்.

'LCROSS' செயற்றிட்டத்தால் கிடைக்கப்பெற்ற தரவுகளை முழுமையாக ஆய்வு செய்ய இன்னும் சிலகாலம் எடுக்கும். ஏராளமான தரவுகள் கிடைத்திருப்பதே இந்த தாமதத்திற்கான காரணமாகும்" என கொலப்ரேட் குறிப்பிடுகிறார்.

சந்திரனின் 'கெப்யுஸ்' குழியிலுள்ள நீரைத் தவிர, அங்கு வேறு பல மூலப்பொருட்களும் இருப்பது தெரியவருகிறது. அவை பில்லியன் கணக்கான வருடங்களாக சேகரிக்கப் பட்ட மூலப்பொருட்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்திரனில் இருந்து பெறப் பட்ட நீரைக் குடிப்பதற்கு முன் அதனை வடிகட்டிச் சுத்தம் செய்யவேண்டியது அவசியம் என்றும் அந்த நீரில் 'மெதனோல்' இருக்கின்றது என்றும் கொலப்ரேட் மேலும் தெரிவிக்கின்றார். இந்த நீரைக் குடிக்க முடியாது. அவ்வாறு குடித்தால் மனிதர்கள் தமது கண்பார்வையை இழக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிடு கின்றார்.

இதேவேளை, 2020 இல் மற்றொரு அமெரிக்கரை சந்திரனில் தடம் பதிக்கச் செய்ய நாஸா நிறுவனம் திட்டமிட்டுள்ளது. எனினும், அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் முன் ஏற்பாடுகளும் இல்லாததால், நாஸா நிறுவனம் அதனை நனவாக்குவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக் குகின்றது. இதுவரை புவியிலிருந்து 12 பேர் சந்திரனில் காலடி வைத்துள் ளனர். அவர்கள் அனைவரும் அமெரிக்கர்களே. 1972 இல்தான் மனிதன் இறுதியாக சந்திரனில் காலடி வைத்தான். அது 'அப்பலோ' நடவடிக்கையின் இறுதிக்கட்ட மாகும் என்பது குறிப் பிடத்தக்கது.



வண்ண வாயு

சிவப்பு, பச்சை, நீல நிறங் களில் ஒரு வண்ணக்கலவை யிலான வாயுவை நாஸா படம் பிடித்துள்ளது. அது விண்ணில் உள்ள நெருப்புப் பந்துகள் வெடித்துச் சிதறும்போது ஏற்படும் வாயு என்று ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர். இந்த நெருப்புப் பந்துகள் வெடித்துச் சிதறினால், அதன் தாக்கம் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்றும், அவை சூரியனின் வெப்பத்தைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கும் என்றும் இதுகுறித்த ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வெடித்துச் சிதறும் நெருப்புப் பந்துகளில் இருந்து வெளியாகும் அணுக்கள் மின்னணுவுடன் சேர்ந்து 'எக்ஸ்ரே' கதிர்களையும் உண்டாக்கலாம் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.



சூரிய, சந்திர கிரகணங்கள் எவ்வாறு தோன்றுகின்றன?

சூரிய கிரகணத்தின்போது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் நிலவு (சந்திரன்) வருகின்றது. இதன்போது நிலா சூரியனின் பரப்பை மறைக்கின்றது. இதனால், சூரியன் மறைவதாகத் தோன்றுகிறது.

சந்திர கிரகணத்தின்போது நிலவுக்கும் சூரியனுக்கும் இடையில் பூமி வருகின்றது. இதன்போது நிலவின் மீது பூமியின் நிழல் விழுகிறது. இதனால் நிலவு (சந்திரன்) மறைவதாகத் தோன்றுகிறது. நிலவின் மீது விழும் பூமியின் நிழல் நிலவின் பரப்பைவிட அதிகம். இதனால், சந்திர கிரகணம் அதிகநேரம் நீடிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகிலுள்ள எண்ணிக்கைக்கேற்ப உருக்களில் வட்டமிடுக 1



அறிவுக்கு விருந்து 257 வினாடிகள்

போட்டி: 01



போட்டி: 04

X	Y	M	B	I	T	A	C	K	K	J
K	X	F	Y	O	F	A	S	O	K	D
S	X	T	M	T	T	C	B	M	W	H
R	R	A	N	A	T	B	S	P	K	H
H	T	O	T	C	D	W	L	Z	O	R
O	E	P	T	V	V	Z	O	P	I	F
R	K	E	M	C	S	G	J	N	D	N
S	S	E	C	Q	A	C	I	Z	L	W
E	A	H	C	F	X	R	B	K	Y	K
C	B	S	L	M	Q	X	T	L	R	A

போட்டி: 05

1. சென்றார்கள்
2. குரங்குகள்
3. நியமிக்கப்பட்டுள்ளது

ஒத்த உருவுடன் இணைக்க 2

அற்லஸ் அறிவுக்கு விருந்து - 257 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01

நாதில் அஹமட்,
தரம் - 1,
ஸாஹிரா ஆ.பா.,
புத்தளம்.

போட்டி: 02

எம்.முஃப்தி,
தரம் - 1,
அல்-அஸ்ஹர் ம.கல்.,
திஹாரி.

போட்டி: 03

எம்.விதுக்ஷினி,
தரம் - 4,
பட்டாவத்த த.வித்.,
பதுளை.

போட்டி: 04

அபிராமி இரவீந்திரன்,
தரம் - 7^,
யா/வடமராட்சி ம.ம.கல்.,
கரவெட்டி.

போட்டி: 05

சூ.விமலேசன்,
தரம் - 10^,
யா/ஹாட்லிக் கல்,
பருத்தித்துறை.

தயாரிப்பு - நூஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.05.19 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 260
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

இலக்கங்களை முறையே இணைத்து படத்தைப் பூர்த்தி செய்க 4



கூட்டத்தைக் குறிக்கும் சொல்லில் கீறிடுக 5

1. கீரை - (கற்றை/கட்டு)
2. முகில் - (குவியல்/கூட்டம்)
3. மலர் - (கொத்து/வளையம்)
4. சாவி - (குலை/கோர்வை)
5. மலை - (தொடர்/சிகரம்)

th, wh, ch, sh ஆகிய எழுத்துக்களை பொருத்தமான இடத்தில் எழுதுக 3



பாராட்டுப் பெறுவோர்:

- லா.கிறிஸ்டோபர், தரம்-9^, கவிரவில த.ம.வித்., சாமிமலை.
- சி.சுபாங்கி, தரம்-6^B, வேம்படி ம.உ/த பாட., யாழ்ப்பாணம்.
- எஃப்.அஃப்லா, தரம்-8^B, நஸ்ரியா ம.கல்., சிலாபம்.
- எஃப்.சலீகா, தரம்-6^T, விஹாரமஹாதேவி ம.கல்., கண்டி.
- எம்.ஆஷிக், தரம்-9^E, திருத்துவ கல்., கண்டி.
- ம.கல்ப்பனா, ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
- எம்.நூரா, தரம்-4^, ஸாஹிரா கல்., மாவனல்லை.
- எஃப்.அம்னா, பானகமுவ, குருணாகலை.
- ஆர்.யுகந்தி, தரம்-2, பாக்கியம் தே.பாட., வலவெல.
- சி.கிருஷிகா, தரம்-8^D, சாவகச்சேரி இ.கல்., சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன காலம் முதல் தொடரும் கலை

பழங்காலத்தில் ரோம் அரசின் அறிக்கைகள் பொதுமக்கள் பார்வைக்காக சுவரொட்டிகள்போல் ஒட்டப்பட்டனவாம். புராதன காலந்தொட்டு தொடர்ந்து வரும் ஒரு கலை கிராபிட்டி (Graffiti) என்னும் சுவர் ஓவியக்கலை. உலகுக்கு நம் கருத்துக்களை தெளிவாகவும் இலகுவாகவும் எடுத்துச்சொல்லும் ஒரு வழிதான் இந்த சுவர் ஓவியக்கலை.

தனிநபர் அல்லது குழுக்கள் இதில் ஈடுபடுகின்றனர். இத்தாலியின் பொம்பீயில் கண்டுபிடிக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைக் காலச் சுவர்களில் இதுபோன்ற ஓவியங்களும் வாசகங்களும் தீட்டப்பட்டிருக்கின்றன.

நவீன சுவர் ஓவியக்கலை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 1960 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கியது. அங்கு பல்வேறு குழுக்கள் செய்திப் பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்த பின்னர் படிப்படியாக இந்த செயற்பாடுகள் இல்லாமல் போயின.

இக்கலைக்கு நமக்குத் தேவையானவை ஒரு வாளி வர்ணம், தூரிகை, பெரிய சுவர், புதுமையாகச் சிந்திக்கும் திறன் ஆகியவைதான். இது ஒரு தெருவோரக் கலையாக உலகம் முழுவதும் பின்பற்றப்பட்டு வருகிறது.

தங்களின் எல்லைகளைக் குறிக்கவும், தங்கள் பகுதிச் செய்திகளை வெளியிடவும் சுவர்களைப் பயன்படுத்தினர். அமெரிக்க ஓவியர்களான 'டாக்கி 183', 'டிரேசி 168' ஆகியோர் பாதாள ரயில்களில் ஓவியங்களை பெரிய அளவில் தீட்டி வைத்தனர். 'டாக்கி 183' இன் சித்திரங்கள் பற்றி 1971 ஆம் ஆண்டில் ஒரு செய்தித்தாள் தொடர் கட்டுரைகளை வெளியிட இக்கலை மேலும் தீவிரமடைந்தது.

சுவர் ஓவியக் கலைஞர்கள், எழுத்தோவிய முறையில் தங்களின் கையெழுத்துடன் சுவரில் தீட்டத் தொடங்குகின்றனர். அமெரிக்காவில் அவர்கள் பாதாள ரயில் பாதைகளுக்குள் புகுந்து, 'ஸ்பிரே பெயிண்டிங்' உபகரணங்களின் உதவியுடன் ரயில் பெட்டிகளில் எழுத்துக்களையும் ஓவியங்களையும் தீட்டி வைத்து விடுகிறார்கள். அதன்மூலம் அவர்களின் 'கலை' பல்வேறு நகரங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.

இந்தக் கலை வளர வளர, பல்வேறு சுவர் ஓவியக் கலைஞர்களும் தங்களின தனித்தன்மையை வெளிக்காட்டும் வகையில் மேலும் மேலும் புதுமையான, சிக்கலான டிசைன்களை வரையத் தொடங்கினர்.

ஆனால், அதிகாரிகள் இவற்றை மோசமான அத்துமீறலாகக் கருதுகின்றனர். எனவே, இந்த ஓவியங்களை நகரச் சுவர்களில் இருந்தும் ரயில் பெட்டிகளில் இருந்தும் உடனுக்குடன் அகற்றிவிடுகிறார்கள். அதேநேரத்தில், கலை வட்டாரத்தில் இவை மதிப்போடு பார்க்கப்படும் நிலையும் தொடங்கியிருக்கிறது. வீடியோ கேம்களிலும் விளம்பரங்களிலும் இவை இடம்பெறத் தொடங்கியிருக்கின்றன.

இவை ஒருவர் தனது கருத்துகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளியிடுவதற்கான சிறந்த வழி என்றும் ஓவியக் கண்காட்சிகளிலும் அருங்காட்சியகங்களிலும் அடங்கிய ஓவியங்களை தெருக்களுக்குக் கொண்டு வரும் நல்ல வழி என்றும் இவை பற்றிக் கலை விமர்சகர்கள் கூறுகின்றனர். சில நாடுகளின் நகரங்களில் சுவர் ஓவியங்களைத் தீட்டுவதற்கு என்றே தனியான பகுதிகளை ஒதுக்கியிருக்கிறார்கள்.

கடலுக்குள்ளிருந்து புராதனகால செல்வங்கள்

கடலுக்கு அடியில் காணப்பட்ட சிதைவுற்ற கப்பலில் இருந்து புராதன காலத்து செல்வங்கள் சிலவற்றை இந்தோனேஷிய மீனவர்கள் மீட்டெடுத்துள்ளனர். கூரியவாள் ஒன்றின் தங்கக் கைப்பிடி, தங்க ஆபரணங்கள், நாணயங்கள், மாணிக்க, வைரக் கற்கள், முத்துக்கள், ஈரானிய கண்ணாடிச் சாமான்கள், சீன மட்பாண்டங்கள் என்பன இதில் அடங்கும்.

இந்த செல்வங்கள் தற்போது இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. சிதைவுற்ற இந்தக் கப்பல் ஆயிரம் வருடங்கள் பழைமைமிக்கதென தெரியவருகிறது.

இந்தோனேஷிய மீனவர்கள் மேற்கு ஜாவாவின் சயர்பன் (Cirebon) கடல் பகுதியின் அடியில் இந்தக் கப்பலை கண்டுபிடித்துள்ளனர்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட கூரியவாளின் தங்கக் கைப்பிடியில் அரபு எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன.

யூ மைஸ் பொட் (Yue Mize Pot) எனப்படும் மட்பாண்டங்கள் 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனத் தயாரிப்புகள் என்று நம்பப்படுகின்றன. பெல்ஜிய புதையல் வேட்டைக்காரரான லக்ஹேமன்ஸ் (Luc Heymans) இதுபற்றித் தெரிவிக்கையில் ஆசியாவில் மூக்கிய கண்டுபிடிப்புக்களில் இதுவும் ஒன்று எனக் கூறினார்.

ஏரிக்குள் சிதைந்துபோன ஆலயம்

உலகின் மிக உயரமான ஏரியான டிட்டிகாக்கா (Titicaca) வுக்கு அடியில் சிதைந்துபோன ஆலயமொன்றை சர்வதேச புதைபொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

டிட்டிகாக்கா ஏரி, பெரு மற்றும் பொலிவியாவின் எல்லையில் அமைந்துள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் 12,500 அடி உயரத்தில் இந்த ஏரி அமைந்துள்ளது. தென் அமெரிக்காவில் மிகப்பெரிய ஏரியும் இதுவேயாகும்.

பயிர்ச்செய்கைக்கான நிலப்பகுதி, நீண்ட பாதை மற்றும் 2600 அடி நீள சுவர் என்பனவும் இந்த ஏரிக்குள் காணப்படுகின்றன. இந்த சிதைந்துபோன ஆலயம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று தெரிகிறது. இந்த ஏரி அமைந்துள்ள பகுதியில் மூழ்கிய பாதையொன்றின் மூலமாகவே இந்த ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ஏரியைப் பற்றி பல வியப்புக்குரிய கதைகள் கூறப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று - வனாக்கு என்னும் நீருக்குள் உள்ள நகரம் பற்றியது. இரண்டாவது - இன்கா இனத்தினரது தங்கப் புதையல். இன்கா நாகரிகத்தின் பிறப்பிடமாகவும் இந்த ஏரி குறிப்பிடப்படுகின்றது. சூரிய பகவானின் பிள்ளைகள் இந்த ஏரி நீருக்கு வெளியில் தோன்றுவதாக அவர்களின் புராணம் கூறுகிறது.

இந்த சிதைவுகளைப் பாதுகாக்க நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை வழங்குவதாக பொலிவிய அரசு அறிவித்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை
தாவாந்தரைத் வடிமகம்
அருகு சலை, யாழ்ப்பாணம்

கண்பார்வை இழந்த இளைஞர் நாவினால் உலகைப் பார்க்கின்றார்...

எதையுமே நாம் பார்ப்பது கண்களால்தான். ஆனால், பிரிட்டனைச் சேர்ந்த ஓர் இளைஞர் நாவினை தனது கண்களாகப் பாவித்து இந்த உலகைப் பார்க்கின்றார். இது உண்மையா? என்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். ஆம்! இது மந்திர வித்தையல்ல, நவீன விஞ்ஞான வளர்ச்சியின் இன்னுமொரு வளர்ச்சிப்படிதான் இதுவாகும்.

சரி விடயத்தைப் பார்ப்போம். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கிரேக் லன்ட்பேர்க்கின் வயது 24. இவர் பிரிட்டன் இராணுவத்தில் சேர்ந்து ஈராக்கில் போர் புரியச் சென்றிருந்தார். 2007 ஆம் ஆண்டில் நடந்த தாக்குதல் சம்பவமொன்றில் தனது இரண்டு கண்களையும் இழந்தார். இருப்பினும், நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியானது அவருக்கு கைகொடுத்தது. அமெரிக்க இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரலான கேல் பெலொக் என்பவரும் அவரின் தொழில்நுட்பக் குழுவினரும் இணைந்து புதுவிதமான உபகரணத் தொகுதியொன்றைத் தயாரித்திருந்தனர். அவர்கள் இந்த உபகரணத் தொகுதியினைக் கண்பார்வை இழந்தவர்களின் வாழ்க்கைக்கு ஒளியேற்றுவதற்கென்றே தயாரித்திருந்தனர்.

கருமை நிற மூக்குக் கண்ணாடியில் நுணுக்கமான வீடியோ கெமரா மற்றும் 'லொலிபொப்' வடிவிலான நாக்கில் வைக்கக் கூடிய ஒரு கருவியையும் கொண்டதே இந்த உபகரணத் தொகுதியாகும். அதாவது, மூக்குக் கண்ணாடியில் பதிக்கப்பட்டுள்ள வீடியோக் கெமரா மற்றும் நாவில் வைக்கப்பட்டிருக்கும் 'லொலிபொப்' வடிவிலான கருவி ஆகிய இரண்டையும் இணைக்கும் விதமான கட்டளையிடும் கட்டுப்பாட்டு (Control) கருவியொன்றையும் கொண்ட இந்த உபகரணத் தொகுதி அவருக்கு கண்ணாகச் செயல்பட்டது. இது எவ்வாறு சாத்தியப்படுகின்றதென்றால் கெமராவில் கிடைக்கப் பெறுகின்ற உருவத்தை (உருவை வடிவமைக்கும் புள்ளிகள்) கொண்டு, நாவின்மீது வைக்கப்பட்டிருக்கும் 'லொலிபொப்' வடிவிலான கருவியூடாக உணர்வலைகளை ஏற்படுத்தி அதனூடாக அந்த நபரின் சிந்தையில் குறித்த உருவத்தை சிருஷ்டித்து பதியச் செய்கின்றது.

கெமராவில் கிடைக்கப் பெறுகின்ற காட்சியானது மின்அலையாக 'லொலிபொப்' கருவி வழியே நாவிற்கு உணர்த்தப்படுவதால் அவ்வேளையில், கீச்சு மூட்டுவதைப் போல் வித்தியாசமான ஓர் உணர்வு ஏற்படும். உருவத்திற்கு உருவம் இந்த உணர்வுகள் வேறுபடும். அதன்படி குறித்த காட்சி என்ன என்பது மூளைக்கு சமிக்ஞையாக அனுப்பப்படும். இதற்கமைய

நவீன தொழில்நுட்பத்தின் மற்றுமொரு வளர்ச்சிப்படி

குறித்த காட்சி என்ன என்பதை உணரக்கூடிய தன்மை ஏற்படும்.

இத்தகைய சிறப்புமிகு கருவிக்கு 'பிரேன்போட்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த 'பிரேன்போட்' கருவியைப் பாவிக்கும் முதலாமவர் என்ற பெருமையையும் கிரேக் லன்ட்பேர்க்தான் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, மே மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd, No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 12, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org